புதினப்பத்திரிகையாகப் ப[illegible]செய்யப்பெற்றது
உ
விரோதிஞு (1889) ஆவணிமீ உஅஉ ஆரம்பமானது.

பத்திரக்கிரயம்.
வருஷம் ஒன்றுக்கு:
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5-00
இங்கிலீசும் தமிழும் 9·00
இலங்கை இந்தியா ரூ 8 00
இங்கிலீசும் தமிழும் 12·00
சோதிவாய்ப்பகுதி ரூ 9-00
இங்கிலீசும் தமிழும் 13·00
முற்பண மனுப்பின லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"கவனத்தாலு நல்லவை கேட்க அவனத்தாலும் ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.
முதன்முறைக்கு:
,, ஒருசலம் ரூபா 10 00
,, அரைச்சலம் ,, 5-50
,, கால்சலம் ,, 4 00
அடுத்த முறைகட்கு மேற்படி கிகிதத்திற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பின லன்றிக் கவனிக்கப் படா.

"சீர்பூத்த கருவி நூலுணர்ச்சி தேசஞ் சிவபூத்த சோமா மங்களோங்கப், பார்பூத்த புறச்சமய நிரனாணீங்கப் பரம்பூத்த சைவநிலைபாரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்த நீனி அனுபவ [illegible] தந்த, வார்பூத்த வரிவிச்சை சொரிநிலவு நேர மதம்பூத்த சிராபதர்முன் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— பவஞு பங்குனிமீ உகூஉ ( 1935 ஏப்ரல் 8 திங்கட்கிழமை. ) { இலக்கம்—ரு

## இறைவன்—மனிதன்—உலகம்.

(ஸ்ரீமத் சுவாமி மைதிலேயானந்தா)

மனிதன் தேடக் கடவுள் ஒளிக்கிறார். இப்படியாகச் சதா ஒளித்துக் கொண்டிருக்கும் ஓர் கடவுளை அடைய மனிதன் பிரயத்தனப்படுதல் சரியா? அப்படியானால் அவன் அடையும் பயன்தான் யாது? தனக்கெட்டாத ஓர் கடவுளை அடையவேண்டுமென மனிதன் விரும்பித் தேடுவதேன்? கடவுளை அடைய வேண்டும், அவன் தரிசனம் பெறல் வேண்டும் என மனப்பூர்வமாக எண்ணும் பக்தர்கள் தம லக்ஷியத்தை அடையும் பொருட்டு எத்தனையோ துன்பங்களைத் தமக்கு வருவித்து அவற்றைச் சகித்துக் கருமமே கண்ணாயிருக்கின்றனர். அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு தேடுகின்றனரோ, அவ்வளவுக் கவ்வளவு கடவுளும் ஒளித்துக்கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது. இதனால் அவர்களின் துன்பம் அதிகரிக்கின்றது; வருத்தம் அதிகமாகின்றது. எனவே இதன் கருத்து என்ன? கடவுள் தம் பக்தர்களைக் கேலி செய்கின்றாரா?

* * *

கடவுளை அடையவேண்டுமென விரும்புபவர்கள், அவர் ஓர் இல்பொருளன்று உண்மைப்பொருளே என்பதை மனப்பூர்வமாக உணர்கின்றனர். அதற்குத் தான் அவர்கள் கடவுளைத் தேடுவதிற் சலிப்படைகின்றார்களல்லர்.

* * *

எங்கும் தானேயாய் நிற்கும் பரம்பொருள் ஒளிப்பது என்றால் அதன் அர்த்தம் என்ன? அவர் எப்படி ஒளிக்க முடியும்? அவர்தானே அண்டபிண்ட சராசரங்கள் யாவற்றிலும் வியாபித்திருக்கிறார். உண்மையைக் கூறுங்கால், மனிதனே கடவுளிடமிருந்து ஒளிக்கின்றானன்றி, கடவுள் மனிதனிடமிருந்து ஒளிக்கவில்லை. நாங்கள் எங்கள் கண்களை இறுக மூடிக் கொண்டிருந்தால் சூரிய வெளிச்சத்தை அதன் அழகை எவ்வாறு காண்டல் முடியும்? எவ்வாறு ஆநந்தமுறல் முடியும்? கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் உலகம் இருக்கிறது. இந்த உலகப் பொருள்களில் மனிதன் மயங்கவே, இறைவனை அவன் காணாதிருக்கின்றான்.

* * *

ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் இரு மாபெரும் சக்திகள் வேலைசெய்து நிற்கின்றன ஆன்மார்த்த சம்பந்தமான விஷயங்களும் ஒன்றைக்கொன்று பொருது நிற்கின்றன. ஒன்று மற்றதை வெல்ல எத்தனிக்கின்றது. இவ்விரண்டும் தனித்தனி ஒவ்வோர் மனிதனது வாழ்க்கையிலும் தம் செல்வாக்கை அதிகரிப்பிக்க முயற்சி செய்கின்றன. இந்தப் போரில் எது வெல்லும், எது தோற்கும் என்று நிச்சயமாகக் கூற முடியாது:

* * *

மகமது நபியையும் அவரது தோழரான அபூபக்கிர் என்பவரையும் போரிற் படைகள் துரத்திச் சென்றன. அவர்களிருவரும் மெக்காவுக்குச் சிலமைல் தூரத்தில் உள்ள ஓர் குகைக்குள் அடைக்கலம் புகுந்தனர். தம்மைத் தேடி வரும் பெருந்தொகையான படையினரின் சத்தம் மகமது நபிக்கும் அவர் தோழருக்கும் நன்றாகக் கேட்டது. அபூபக்கிர் அஞ்சினார்: "ஐயனே, நாமோ இருவர்: எம் பகைவரோ அநேகர்! நாம் எப்படி எம்மைக் காத்துக் கொள்ளுவோம்" என்று அலறினார். அப்போது நபி அவரைப் பார்த்து, "நாம் இருவரல்ல: எம்முடன் இன்னொருவர் இருக்கிறார் என்பதை நீ அறியாயா? ஆண்டவன் எம்முடன் இல்லையா? அவர் எம்மைப் பாதுகாப்பார்; நீ அஞ்சாதே" என்றார். தமது வாழ்நாளின் மிக்க நெருக்கடியான சந்தர்ப்பத்தில் மகமது நபி ஆண்டவனே துணையென நம்பினார் இறைவனும் அவரது உயிரை மிக அற்புதமாகக் காப்பாற்றினார். அது ஓர் பெரும் வெற்றி! அது உலகார்த்த வெற்றியுந்தான்! ஆன்மார்த்த வெற்றியுந்தான்! கொரிஷ் படையினரிடம் இருந்து மகமது நபியின் உயிர் காப்பாற்றப் பட்டது அவர் அந்த உயிரை இஸ்லாத்தின் நன்மைக்காகக் காத்துக் கொண்டார். இதில் ஓர் பெரும் போதனை இருக்கிறது

* * *

கிறிஸ்து நாதர் தம் சிஷ்யன் ஒருவனால் துரோகம் செய்யப்பட்டு சற்றில் சிலுவையிலும் அறையப் பட்டார். அவர் "பரிசுத்த பிதாவே! தமது இராச்சியம் வருவதாக; பரமண்டலத்திற் போலப் பூமண்டலத்திலும் தமது அருள் நிலவுவதாக" என்று இறைவனை நோக்கிப் பிரார்த்திப்பது வழக்கம் இறைவன் அவர் பிரார்த்தனைக்குத் திருவுளம் இசைந்தார். அதன் பயனாக யேசுநாதர் மகத்தான வெற்றியடைந்தார். கொடிய சிலுவையில் மாணித்ததன் மூலமாக அவர் ஓர் பெரும் ஆன்மார்த்த வெற்றியை அடைந்தார். சிலுவையில் அவரை இடும்போது அநேகர் அவரை நோக்கி எள்ளி நகையாடினர்: "கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தானறியான்" மற்றவர்களைக்காப்பாற்ற முன்வந்த இவர் தம்மைக் காப்பாற்ற வகைதெரியாது விழிக்கின்றாரே!" என்று கேலி செய்தனர், ஆனால் அந்த நகைப்புக்கெல்லாம் கிறிஸ்து ஒன்றும் பேசினாரல்லர்; அவர்களை நிந்திதாரல்லர்; கொந்தாரல்லர்: அவர் இறந்தார் சிலுவையில்; இறந்தபின் உரோமப் படைவீரரின் தலைவன், "உண்மையில் இவர் ஓர் சத்திய புருஷரே! இம் மனுஷன் தேவகுமாரனே" என்றான், முன்னர் யேசுவைத் திட்டிக் கேலி செய்த ஜனங்கள், "அந்தோ, மதிமோசம் போனோமே" என்று பச்சாத்தாபம் கொண்டனர்.

* * *

யேசுநாதர் அடைந்த வெற்றி மகமது நபியடைந்த வெற்றியிலும் பார்க்க வித்தியாசமானதே! ஆனால் பயன் ஒன்றே! இறைவனின் அருட்டிறம் எப்போதாவதால் அறையப்படுமா? அறையப்படத் தக்கதா? நாம் எம் அறியாமையினால், சிற்றறிவு சிறுதொழிலால் அவரது அருட்டிறத்தை அளந்தறிய முயற்சிக்கையில் பிழைகள் விடுகின்றோம். எனவே மனிதன் முதற் செய்யவேண்டிய வேலை என்னவென்றால் இறைவனின் அருட்டிறத்தை அறிய முயலல் வேண்டும். அவரின் சாம்பிராச்சியத்தைத் தேட வேண்டும் என்பதே. "உங்கள் பிள்ளைகள் எவ்வளவு தீயர்களாயினும் அவர்களுக்கு அன்புடன் நீங்கள் நல்ல பண்டங்களை வாங்கிக் கொடுக்கிறீர்கள்: அப்படியானால் பரமண்டலத்தில் உள்ள எம் பரமபிதா, சர்வஞ்ஞபரபரன் நாம் விரும்பும் பொருள்களைத் தாராது இருப்பாரா? நாம் கேட்கமுன்னரேயே, அவர் எமக்குத் தேவையானவற்றை அளிப்பார்" என்று கிறிஸ்து கூறினார்.

* * *

"உலக வாழ்க்கையில் தர்மத்துக்கும் அதர்மத்துக்குமிடையே போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒருவன் இப்போரில் வெற்றி பெற்றுச் சுவதந்திர மடையவேண்டுமானால், தன் கர்மத்தைச் சரிவரச் செய்தல் வேண்டும், ஆனால் இத்தர்ம யுத்தத்தில் பங்கு பற்ற நீ பின்னிற்பாயானால் நீ உன் கடமையை இழந்தவனாவாய்: உன் கர்மத்தைச் செய்யாதவனாவாய்: பாவியாவாய்: இத்தர்மத்திற் பங்குபற்றி இறப்பாயானால் வீரசொர்க்கம் கிடைக்கும். வெற்றி கொள்வாயானால் பூமிக்கு அரசனாவாய்: எனவே கௌந்தேய குந்திமகனே! அர்ஜுனா! எழுந்து போர்க் கோலங் கொள்: போர் செய்யத்துணி. இன்பமும் துன்பமும், நயமும் நட்டமும் வெற்றியும் தோல்வியும் யாவும் எனக்குச் சரியே என்ற எண்ணத்தைக் கொண்டு விருப்பு வெறுப்பின்றிக் கர்மாவைப் புரிவாயாக: போரில் ஈடுபடுவாயாக. விருப்பு வெறுப்பின்றி இப்போரில் ஈடுபடுவாயானால், உன்னைப் பாவம் அணுகாது அன்றி ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ச்ஜுனனுக்குக் குருக்ஷேத்திரத்திற் கூறிய மொழிகள் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. பகவானின் சாம்ராச்சியத்தை இப்பூமியிலே ஸ்தாபிப்பதற்கான சிறந்த போதனை இதுவேயாகும். இத்தகைய யுத்தத்தில் வெற்றி பெறவேண்டுமானால் சதா பகவந்நாமத்தை ஸ்மரித்து, அவன் செயலேயன்றி என்செயலால் ஆவது ஒன்றில்லை என்ற பகவதார்ப்பணமாகக் கர்மாவைப் புரிதல் வேண்டும், "எனவே சதா என்னைப்பற்றியே சிந்தித்துப் போரைச் செய்வாயாக" என்றும், உன்மனம் என்பாலேயே இருக்குமானால், நீ என்னை அடைவது திண்ணம்" என்றும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதையில் உபதேசித்தருளினார், (—வரும்)

## அருவருப்பான செயல்கள்.

—:o:—

### பருத்தித்துறை நீதிஸ்தலத்தில் வழக்கு.

சென்ற மார்ச்சுமாதம் இரண்டாம் மூன்றாம் தேதிகளில் தொண்டைமானாற்றில் உள்ளதும் தங்கள்ளோரால் சந்திதெரு என்று அழைக்கப்படுவதுமான ஓர் தெருவழியே பொன்னுச்சாமி நாராயணசாமி, காளியப்பர் காசி, ராஜா, துரையப்பா பாலசுந்தரம், சின்னத்தம்பி பாலசிங்கம், கதிரிப்பிள்ளை இரத்தினம், மயிலவாகனம் அம்பிகைபாகர், சங்கரப்பிள்ளை ஐயர், கந்தசாமிஐயர், சின்னக்கண்டுபெண் சீனியம்மா, செல்லமுத்து பெண் அன்னம்மாள், அருணாசலம் பெண் தங்கச்சிப்பிள்ளை, ராஜா பெண் தங்கப்பிள்ளை, ஆகிய பன்னிருவரும் இராக்காலத்தில் பிரஸ்தாப தெரு வழியே தூஷணமான பாட்டுகள் பாடினார்கள் என்றும் தூஷணமான வார்த்தைகளைப் பேசினார்களென்றும் தொண்டமானாறு விதானை திரு ராமசாமியால் தொடரப்பட்ட வழக்குச் சென்ற சனிக்கிழமை பருத்தித்துறைப் போலிஸ் கோட்டில் நீதிபதி திரு ஸ்பென்ஸர் ராசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி பக்கம் பிரக்டர் திரு கே. மகாலிங்கமும் பிரதிவாதிகள் பக்கம் திரு என். பொன்னையா, திரு சிறில் கந்தராசா திரு சணபாலலிங்கம். திரு கிருஷ்ணபிள்ளை ஆகியோர் வப்பட்டிருந்தனர் இவ்வழக்கில் தொண்டைமானாற்றி லுள்ளவரும் பிரபல வியாபாரியுமான திரு வீரகத்திப்பிள்ளை ராசசேகரம் முக்கியமான சாட்சியாய் விசாரிக்கப்பட்டார். விசாரணையின் இறுதியில் எதிரிகள் அனைவரும் குற்றவாளிகள் என ஒப்புக்கொண்டபடியால் நீதிபதியால் கடுமையாய் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள்

## யுத்தம் வேண்டாம்

—:o:—

### 120 ஆயிரம் மாணவர்கள் வேலை நிறுத்தம்.

அமெரிக்க ஐக்கிய அரசினரை யுத்தத்தில் இழுத்து விடுவதற்காகச் செய்யப்படும் முயற்சியைக் கண்டிக்க ஏப்ரல்மீ 21-ந் தேதி 11 மணிக்கு எல்லாக் கல்லூரிகள் சர்வ கலாசாலைகளி லுள்ள 120 ஆயிரம் மாணவர்களும் வேலை நிறுத்தம் செய்துவிடப் போகின்றார்களாம். அவர்கள் ஒரு மணி நேரம் வேலை நிறுத்தம் செய்து யுத்தத்தைக் கண்டித்துப் பொதுக் கூட்டங்கள் கூட்டப் போகின்றனராம்.

## சொந்தரதத்தைக் கூலிக்கு விடுதல்.

### 34 பேருக்கு விரோதமாக வியாச்சியம்.

யாழ்ப்பாணத்திலே சொந்த உபயோகத்திற்கெனப் பதிவு செய்யப்பட்ட இரதங்களுட் பல கூலிக்கு விடப்படுகின்றனவென அறிந்துபோலும், பொலிஸ்பகுதியார் ஊக்கத்தோடு ஆராய்ந்து நிரிந்து 34 பேருக்கு மாறாக யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் வழக்குத்தொடர்ந்துள்ளனர். முதலாம்வழக்கு சென்ற செவ்வாய்க்கிழமை (2-4-35) விசாரணை செய்யப்பட்டது. வண்ணார்பண்ணை வாசியாகிய முருகேசு நாகலிங்கமென்பவர் 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்; மேலும் அவருடைய சாரத்திய தாதாப் பத்திரம் அன்று தொடக்கம் மூன்றுமாசத்திற்குச் செல்லாதெனவும் தீர்ப்புச்செய்யப்பட்டது. விசாரணைத் தினத்தன்று மோட்டரதச் சாரதிகளும் சொந்தக்காரருமாகப் பன்னூற்றுக் கணக்கானோர் நீதிஸ்தலத்தைச் சூழ்ந்து விசாரணையையும் தீர்ப்பையும் அவதானித்துக்கொண்டு நின்றனர்.

## பர்மாவில் காங்கிரஸ் மகாசபை.

ஹிந்து மஹாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கும் பொக்கி உத்தமர் அவர்கள் அடுத்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தைப் பர்மாவில் நடத்த வேண்டுமென்று பாபு ராஜேந்திரபிரசாத்தை வேண்டிக்கொண்டிருக்கிறார். 50 வருடங்கட்கிடையில் ஒரு தடவைகூட பர்மாவில் காங்கிரஸ் மகாசபை கூடியதில்லை யென்று அவர் கூறியுள்ளார். மகாசபையைக் கூட்ட முடியவில்லை யென்றால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தையாவது நடத்துமாறு அவர் வேண்டிக் கொண்டிருக்கிறார்.

## மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டு.

மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டு சமீபத்தில் ஜலதோஷத்தால் பிடிக்கப் பட்டிருந்த போதிலும் அவர் பூரணமாகக் குணமடைந்து விட்டார். அவர் வெள்ளி ஜூபிலி விழா வரையிலும், அதற்கப்புறமுங் கூடச் சில மாதங்கள் வரை பிரதம மந்திரியாகவே இருந்து வருவார் என்று 'அப்ஸர்வர்' பத்திரிகை கூறுகிறது. அவர் தம் பதவியிலிருந்து விலகி விடப்போகிறார் என்று பலமுறை வதந்தி கிளப்பி விடப்பட்டது. ஆயினும், அவர் சமீபத்தில் ஓரிடத்தில் பேசிய பேச்சிலிருந்து மேற்படி விஷயம் உறுதியாகிறது.

## இந்துசாதனப் பிரசுரம்.

வருகிறவியாழக்கிழமை(11.4.35) வெளிவருதலின்றி புதுவருடத் தினத்தன்றே ஷைபிரசுரம்(14.4.35) வெளிவரும்.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பவஞு
பங்குனிமீ ௨௬௳ திங்கட்கிழமை.


## யுவவருடப் பிறப்பு.

"யுவவருடம் பூவுலகிலுள்ளோர்கள் நோயால் தவவருந்து வார் பசுமாத் தங்கும்—நவமாக வாழும் பரிவாரம் மாகியுண்டு செல்வியையும் தாழ்வான தோன்றுமில்லை தான்."

யுவவருடமானது வருகிற சனிக்கிழமை இரவு, 7¾ மணிவரையிற் பிறக்கின்றது. ஆனாலும் புதுவருடக் கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமையே கொள்ளப்படும்.

வருகிற யுவவருடத்திற் சகல மங்கலங்களுமுண்டென்றும் முன் மழையதிகம் பின் மழை குறைவென்றும் பலவகைப் பயிர்களும் பலிதமாகுமென்றும் அந்தணர்க்குக் கஷ்டமென்றும் அரசினருக்கும் வேளாளர் முதலியோர்க்கும் மத்திம பலனென்றும் வைசியர்க்குச் சுகமுண்டென்றும், சகல பலாபலன்களையும் திட்டிக் கண்ட சுபபலன் நான்குபங்கும் கஷ்ட பலன் மூன்றுபங்கும் என்றும் பஞ்சாங்கங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

புதுவருடப்பிறப்பு இந்து மக்களுக்கு மாத்திரமன்று உலகத்திலுள்ள எல்லாச் சாதியாருக்கும் எல்லாச் சமயத்தினர்க்கும் விசேஷமுடையது. அவர்கள் தத்தம் வருடங்கள் பிறக்குங் காலத்தில் தாம் வழிபடும் தெய்வத்திற்கு விசேஷ ஆராதனை வணக்கம் முதலியன செய்து, தத்தம் இல்லத்திற் செய்யவேண்டிய மங்கல கருமங்கள் கொண்டாட்டங்களென்னுமிவைகளை ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடுஞ் செய்வர். இவ்விலங்கையிலுள்ள இரு பிரதான சாதியினராகிய தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் புதுவருடப் பிறத்தலும் கொண்டாட்டமும் ஒரே காலத்திலே யாகும். சிங்களமக்கள் தொன்று தொட்டுப் புதுவருடப்பிறப்பை விசேஷமாகக் கொண்டாடி வருகிறார்கள். வருடப் பிறப்புக் காலங்களில் அவர்கள் செய்ய வேண்டிய கிரியைகள் கொண்டாட்டங்கள் என்னுமிவைகளை அன்றும் இன்றும் என்றும் ஒரேவகையாக. சதாது சிறிதும் அலட்சியஞ் செய்யாமற் கைக்கொண்டு நடாத்தி வருகின்றார்களாம்.

நம் தமிழ் மக்களாயுள்ளோர் வருடப் பிறப்புப் புண்ணியகாலத்தில் தத்தம் இல்லத்தைச் சுத்திசெய்து அலங்கரித்துப் பூரண கும்பம் வைத்து முற்றத்திற் சூரியனுக்குப் பொங்கலிட்டும், மருத்துநீர் வைத்து ஸ்நானஞ் செய்து சந்தியா வந்தனம் முடித்து ஆலயத்திற்குச் சென்று சுவாமிக்கு விசேஷ அபிஷேகம் பூசை முதலியன செய்வித்துத் தரிசனம் செய்தும் வீட்டிற்கு மீண்டு வந்து தம் சுற்றமித்திரர் விருந்தினருடன் போஜனஞ் செய்வர். வருடப்பிறப்புத் தொடக்கம் எட்டுநாள்களுள், சுபமுகூர்த்தம் பார்த்துக் கைவிசேஷம் விருந்து இனசனக் கொண்டாட்டம் பெரியோர் தரிசனம் முதலியவற்றைச் செய்வர். சிறுபிள்ளைகளாயுள்ளோர் போர்த்தேங்காயடித்தல் முதலிய விளையாட்டுக்களுள் ஈடுபட்டுக் காலங் கழிப்பர். சுருங்கச் சொல்லுமிடத்து வருடம் பிறந்த முதல்வாரம் முழுவதும் தமிழ் மக்கள் பொங்கல் முதலிய தெய்வவழிபாடுகளிலும் கொண்டாட்டங்களிலுமேயொழிய வேறு கருமங்களில் தலையிடார். ஆனால் இக் காலத்திலெனிலோ நகைநாகரீகந் தலைப்பட்டமையினால் தமிழ் மக்களுட்பலர் இப்படியான சற்கருமங்களெல்லாம் வெட்டிகச் செயல்களாகுமென்ற எண்ண முடையாராய் இவற்றை அலட்சியஞ் செய்து தலைப்படுகின்றனர். இன்னோர் செயல் பேதமையின் பாற்பட்டதென அறிவுடையோர் இவர்களின் பொருட்டுப் பரிதாபமுறுவதே யன்றி வேறியாது செய்யலாம். ஒரு கருமத்தை விதிப்படி நன்கு தொடங்குவது அக்கருமத்திற் பாதி நிறைவேறியதற்குச் சமமாகுமென்னுங் கருத்தமைந்த ஆங்கிலப் பழமொழியொன்றுண்டு. நாங்களும் எக்கருமத்தையும் வருடாரம்பத்திற் சுபதினம் பார்த்துச் செய்யப் புகுவோமேல் அவை காலகதியில் இனிது நிறைவேறுமெனக் காத்திருக்கலாம். வருடப்பிறப்பு முதலிய புண்ணிய தினங்களில் தெய்வ வழிபாடு தானதருமஞ் செய்தல் நாட்பார்த்துக் கருமம் ஆற்றுதல் முதலிய இவைகளைப் பைத்தியமான செயல்களென்று எங்கள் மூதாதையர்க்கும் வெட்டிகங் கற்பித்து எவ்வகைமான நியதியுமின்றி நடக்கத் தலைப்பட்டதிலுமேயே, மழையின்மை அகாலமழை பெருமழை விபரீத ரோகங்கள் தொற்றுநோய்கள் அவமிருத்துக்கள் அடிமைத்திறமாகிய இந்த அனர்த்தங்களெல்லாம் வந்து சேருகின்றன என்பதை இனியேனும் நந்தமிழ் மக்கள் உள்ளத்தில் உறுதியெனக் கொண்டு தொன்மை முறைசிகளைக் கைக்கொண்டு நடந்து ஈடேறுவார்களாக.

## தற்கொலை செய்தாள்.

—(*)—

### அடிச்சுவடு பிடித்துச்சென்றதால் வந்த அனர்த்தம்.

சென்றவாரம் தென்மராட்சியைச் சேர்ந்த மாசார் என்னுமிடத்தில் வள்ளிப்பிள்ளை யென்னும் ஒரு பெண் தன்வீட்டு வளையிற் கயிறிட்டுத் தூங்கிப் பிரேதமாகக் காணப்பட்டாள். பிரேதவிசாரணை நடந்தபோது அப்பெண்ணின் கணவனாகிய அப்பு ஆண்டி வேலுப்பிள்ளை யென்பவர் பின்வருமாறு கூறினர்.

"நான் என்வீட்டிற்கு அயலிலுள்ள தென்னந்தோட்ட மார்க்கமாகப் போகும்போது எனது மனைவியின் அடிச்சுவடுகள் மணலிற் பதிந்திருப்பதைக்கண்டு அதனை அவதானிக்கும்போது இராமு பெரியதம்பியின் அடிச்சுவடும் கூட இருப்பதைப் பார்த்து அவ்வடிச்சுவடுகளைத் தொடர்ந்து சென்றேன்; அவ்வடிச்சுவடுகளிரண்டும் தென்னந்தோட்டத்திலுள்ள ஒரு மரத்தடிவரையிற் சென்றிருப்பதையும் அம்மரத்தின்கீழ் அவ்விருவரும் இருந்த, புரண்ட, அடையாளங்களையும் அவதானித்தேன். இதனால் அவள்மீது எனக்குச் சந்தேகம் பிறந்தது. நான் வீட்டிற்கு மீண்டு என் மனையாளைக்கடிந்துவிட்டு அவளை உடனே வந்து கூட்டிக்கொண்டுபோய் விடல்வேண்டுமென்று சொல்லி அவளுடைய பெற்றோருக்கு ஒரு ஆள் அனுப்பிவிட்டு, நானும் உடனே வீட்டைவிட்டு வெளியேபோய்விட்டேன்; இரண்டுமணிநேரம் சென்றபின் நான் வீட்டிற்கு மீண்டுவந்து பார்த்தபோது அவள் வளையில் மாட்டிய கயிற்றிலே பிரேதமாகத் தொங்கியபடி காணப்பட்டாள் இது தான் நடந்த செய்தி."

### புகைரத விபத்து.

"சென்ற வியாழக்கிழமை இரவு எட்டு மணியளவில் காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டுக் கொழும்புக்குச் செல்லும் "பவஸ்வண்டி" தெல்லிப்பழைப் புகைரத ஸ்தானத்துக் கருகாமையில் றோட்டைக் கடந்து செல்லும்போது ஓர் மாட்டு வண்டியுடன் மோதிக்கொண்டதால் ஒரு மாடு நசிக்கப்பட்டு உடனே இறந்து விட்டது. வண்டி சுக்கலாகவுடைந்துபோயிற்று வண்டியிலிருந்த இருபெண்களும் ஒருகைக் குழந்தையும் தெய்வாதீனமாகத் தப்பிக்கொண்டனர். ஒரு பெண்ணுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. வயாவிளான் வாசியான ஞானப்பிரகாசம்-செல்லையா என்பவர் அளவெட்டிப் பரிகாரியார் வீட்டிக்குப் போய்த் திரும்பிவருகையில் தெல்லிப்பழைப் புகைரதப் பாதைக்குச் சமீபமாக வண்டியை நிறுத்திவிட்டுக் கடையில் சாமான் வாங்கப்போனதாகவும், புகைவண்டி வரும் சத்தத்தினால் மாடுகள் வெருண்டு ஓடியதாகவும், ஓடும்போது புகைரதத்தால் மோதுண்ட சமயத்தில் ஒரு மாடு பூட்டையறுத்து ஓடியதாகவும், மற்றையது நசிக்கப்பட்டு இறந்துவிட்டதாகவும், வண்டியின் மேற் கூடாரமும் தட்டும் வேலைமீது தூக்கி எறியப்பட்டமையால், உள்ளிருந்த தாயும் மகளும் காயமடைந்தனெனவும் ஒரு வயதுடைய ஆண் குழந்தை ஒன்று காயமின்றித் தப்பிக்கொண்டதாகவும் தப்பியோடிய மாட்டின் கொம்புகளிரண்டும் முறிந்துவிட்டனவென வும் கூறப்படுகிறது.

## தேவை.

தமிழிலும் இங்கிலிசிலும் வேலைசெய்யக்கூடிய ஒரு கொம்பசிட்டரும் ஒரு மெசின்மன்னும் தேவை; நேரில்வந்து ஒழுங்குசெய்துகொள்ளவும்.

மனேச்சர்,
நாவலர்நாயகி அச்சியந்திரசாலை,
வண்ணார்பண்ணை.

(Mis 9. 8 & 13.4.35.)

## இலங்கை நெல்லின் குணகுணங்கள்

—)o(—

இலங்கை வியாபாரப்பகுதி விசாரணைச் சங்கத் தலைவராக இப்பொழுது வந்துள்ள உத்தியோகத்தர் இலங்கையில் விளையும் நெல்லரிசியின் குணகுணங்களைப் பற்றிய அபிப்பிராயத்தைத் தமக்குத் தெரிவிக்கும்படி, இல்லறம் நடத்தும் பெண்கள் 1000 பேருக்கு "கார்ட்" அனுப்பியிருந்தார். ஆயிரம் பேருள் 490 பெண்கள் இற்றைவரையில் தம் அபிப்பிராயங்களைப் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

1) இந்தியாவிலிருந்து வரும் நெல்லரிசியைக் காட்டிலும் இலங்கையில் விளையும் நெல்லரிசி நல்ல வாசனையுடையதென 82 பெண்கள் தெரிவித்துள்ளனர்.

(2) இலங்கையரிசி சுகத்திற்கும் தேகவளர்ச்சிக்கும் உரியதென 274 பெண்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

(3) இவ்வரிசி அதிக சத்துள்ளதென 84 பெண்கள் கூறினர்.

(4) இலங்கையில் ஆக்கப்படும் நெல்லரிசியை வாங்கி உபயோகிப்பது தங்கள் பிரதான கடமையென 95 மகளிர் வெளியிட்டுள்ளனர்.

(5) தாங்கள் வளர்நெல் லரிசியையே சிறுபராயந் தொடங்கிப் பழகிவிட்டபடியால் அதனை விடுதல் முடியாதென 28 இல்லக்கிழத்தியர் பகருகின்றனர்.

(6) இலங்கையரிசியில் அதிகம் தவிடு போக்கப்படாமையினால் இது மிகவும் நல்லதென 18 மாதர் இயம்புகின்றனர்.

(7) இலங்கையரிசி இலகுவிற் சீரணமாகக் கூடியதென்றும் விலை குறைவானதென்றும் பார்க்க அழகானதென்றும் துர்மணமற்றதென்றும் ஏனைய வனிதையர் எண்ணங் கொள்கின்றனர்.

ஆனால் மேலே சொல்லப்பட்ட இந்தப் பெண்களே இலங்கை நெல்லரிசியைப் பற்றிய குறைவுகளையும் பின்வருமாறு இசைக்கின்றனர்.

(1) இலங்கை நெல்லில் மண் கல் அழுக்கு முதலியன வுண்டென 139 பெண்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

(2) இவ்வரிசியின் நிறம் 44 பெண்களுக்குப் பிடிக்கவில்லை.

(3) இது பெரிய அரிசியென 66 பெண்கள் ஊரரிசியை வெறுக்கின்றனர்.

(4) ஊரரிசி துப்புரவில்லையென்றும் சுத்தமாகத் தீட்டப்படுவதில்லை யென்றும் 86 பெண்கள் கூறுகின்றனர்.

(5) இதற்கு விலையதிகம், சமைப்பதற்கு நேரம் அதிகம் வேண்டும், அதிக கறியோடு சேர்த்தே இதனை உண்ணலாகும், இலகுவிற் சீரணமாகாது என ஏனைய பெண்கள் சொல்லுகின்றனர்.

(6) இலங்கையில் ஆக்கப்படும் நெல்லரிசி இலங்கை மக்களுக்கு வருடச் சோற்றுக்குப் போதியதல்லவென்றும், இதனை நினைத்த நேரம் வாங்கிக்கொள்ள முடியாதென்றும், விளைவு காலத்திலேயே இந்த நெல்லை வாங்குதலாகுமென்றும், ஏனைய காலங்களில் வாங்குதல் இலகுவல்லவென்றும், இக் காரணங்கள்பற்றியே நாங்கள் இலங்கை நெல்லரிசியை வாங்காதுவிடுத்து இந்தியாவிலிருந்துவரும் நெல்லரிசியைவாங்கி உபயோகிக்கிறோம் என்பதாகவும் 286 பெண்கள் அபிப்பிராயங்கூறியுள்ளனர்.

### காலநிலை.

நேற்று இங்கே பெருமழை பெய்தது; இப்பொழுதும் மழைக்கோலங்காணப் படுகிறது

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

இக்கல்லூரியின் புதுவருட விடுதலை இந்த ஏப்பிரல்மீ 4௳ தொடங்கியிருக்கின்றது. வருகிற மேமீ 16-ந் தேதியே கல்லூரி ஆரம்பமாகும்.

## துணிகரமான கொலை.

—:*:—

### நெடுந்தீவுக் கடலில் உமலுக்குட் பிரேதம்.

நெடுந்தீவு வாசியான சின்னத்தம்பி வைத்தியலிங்கம் என்பவரைக் கொலை செய்து, அவர் பிரேதத்தைக் கடலினுள் எறிந்து தம் அக்கிரமத்தை மறைத்தனர் என்று, அவ்வூர் வாசிகளான வைத்தியநாதன் இராமநாதன், இராமநாதன் சின்னத்தம்பி, நாகநாதன் சண்முகம் என்பவர்கள் ஊர்காவற்றுறைப் பொலீஸ் நீதிஸ்தலத்தில் குற்றம் சாட்டப் பட்டனர்.

1-ம் எதிரியான இராமநாதன் கொலை செய்யப்பட்டவனின் மைத்துனர். இவர்களிருவருக்குமிடையே இப்போது சிலகாலமாக மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தது. கொலை நடக்க ஒரு மாதத்திற்கு முன் இறந்தவர் முதலாம் எதிரியின் புகையிலைக் கன்றுகளைப் பிடுங்கி எறிந்தார் என்றும் அதனால் எதிரிக்குப் பெருந்தொகையான பணநட்டம் ஏற்பட்டதென்றும் சொல்லப் பட்டது.

இச்சம்பவம் நடந்த தினத்தன்று, வைத்தியலிங்கம் தனியே தன் கொட்டிலுக்குட் படுத்திருந்தார். அப்போது 1-ம் எதிரி உள்ளே சென்று கத்தியால் மும்முறை வைத்தியலிங்கத்தை வெட்டினன் என்றும், ஒரு வெட்டில் கால்வேறு தலை வேறுபது என்றும் கூறப்பட்டது.

இந்த அக்கிரமத்தைச் செய்து முடித்தபின் 1-ம் எதிரி 2-ம் 3-ம் எதிரிகளை அழைத்து நடந்த சம்பவங்களைக் கூறிய பின், பிரேதத்தை ஓர் "உமலுக்குள்" இட்டு மூவருமாகக் கடலுக்கு எடுத்துச் சென்றனர். கடலுக்குள் உடலையும் பிரேதத்தையும் ஓர் பாறையுடன் சேர்த்துக்கட்டிவிட்டுத் தாங்கள் கடலிலேயே ஸ்நாகம் செய்து தம் வீட்டிற்கு மீண்டனர்.

இப்படிப் பிரேதத்தை மறைத்தமை 1-ம் எதிரிக்கு திருப்தியில்லை எனவே அயலில் உள்ள வேலாயுதர் என்பவருடன் 1-ம் எதிரி மீண்டுங் கடலுக்குட் சென்று பாறையுடன் கட்டப்பட்டிருந்த உடலை எடுத்து அதனை அவிழ்த்துப் பிரேதத்தின் துணிகளைக் களைந்து மீட்டும் பாறையுடன் சேர்த்துக் கட்டிவிட்டு மீண்டார். இதன்பின் அவர் இறந்தவரின் வீட்டிற்குப் போனார். அங்கே இரத்தக்கறைபட்டிருந்த பொருள்கள் யாவற்றையும் எரித்து நிலத்தையும் மெழுகுவித்தார்.

3 எதிரிகளும் தாம் செய்தனவற்றை ஒத்து வாக்குமூலங்கள் கொடுத்திருக்கின்றனர். விசாரணை தவணையிடப்பட்டிருக்கிறது. எதிரிகள் விளக்க மறியலில் இருக்கின்றனர்.

## யுவ வர்ஷம் சித்திரைமாச விசேஷ தினங்கள்.

—o—

| | | |
|---|---|---|
| ௧௳ | (14-4-35) | ஞாயிறு: யுவ வர்ஷப்பிறப்பு; மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவில், கொழும்பு முத்துவிநாயகர் கோவில், காரைநகர் வாரிவளவு ரதோற்சவம். |
| ௩௳ | (16-4-35) | செவ்வாய்: பிரதோஷ விரதம் |
| ௪௳ | (17-4-35) | உமாபதிசிவாசாரியர் குருபூசை; பருத்தித்துறைச்சாமுண்டியம்மை, நீர்வேலிக் கந்தசுவாமி; மூளாய் சித்திவிநாயகர்; திருநெல்வேலி வாலையம்மை; நல்லூர் கைலாசபிள்ளையார் ரதம். |
| ௫௳ | (18-4-35) | வியாழன்: பூரணை விரதம்; சித்திரகுப்த பூசை; இசைஞானியர் குருபூசை. |
| ௬௳ | (19-4-35) | வெள்ளி: திருக்குறிப்புத்தொண்ட நாயனார் குருபூசை. |
| ௰௳ | (23-4-35) | செவ்வாய்: திருநெல்வேலி காயாரோகண சுவாமி; கற்கோவளம் வீரபத்திரர் உற்சவாரம்பம். |
| ௧௫௳ | (28-4-35) | ஞாயிறு: திருநாவுக்கரசுநாயனார் குருபூசை. |
| ௧௭௳ | (30-4-35) | செவ்வாய்: பிரதோஷ விரதம். |
| ௧௯௳ | (2-5-35) | வியாழன்: அமாவாசை விரதம். பரணி (வைரவ விரதம் |
| ௨௰௳ | (3-5-35) | வெள்ளி: கார்த்திகை விரதம்; சிறுத்தொண்டநாயனார் குருபூசை. |
| ௨௨௳ | (5-5-35) | ஞாயிறு: மங்கையர்க்கரசியார் குருபூசை. |
| ௨௪௳ | (7-5-35) | செவ்வாய்: விறன்மிண்டநாயனார் குருபூசை. |
| ௨௬௳ | (9-5-35) | வியாழன்: ஆனைக்கோட்டை கும்பழாவளைப்பிள்ளையார்; திருநெல்வேலி முத்துமாரியம்மை; உசன் கந்தசுவாமி; சுன்னாகம் மயிலணி விசுவநாத சுவாமி; திரிகோணமலை முத்துக்குமாரசுவாமி; கொழும்புச் சுப்பிரமணிய சுவாமி உற்சவாரம்பம். |

# ஓவர் ஸீயர் மாரா? ஒப்பந்த காரரா?

## நகரசங்கத்திற் கண்டனத் தீர்மானங்கள்.
## ஸ்ரீ பொன்னம்பலத்தின் சரமாரியான கேள்விகள்.

யாழ்ப்பாண நகரத்து நாலாம் வட்டாரப் பிரதிநிதியான ஸ்ரீ C. பொன்னம்பலம் அவர்கள் பின்வரும பிரேரணைகளைத் தாம் எடுத்தாளப் போவதாக நகரசங்கத்தில் அறிவித்தல் கொடுத்திருக்கிறார்:

1. சங்கத் தலைவருக்கு ஏற்கெனவே ஓர் மதிப்பும் விளக்கப் படமும் சமர்ப்பிக்க முன், நகரசங்க வேலைப்பகுதி அதிகாரியாகிய ஸ்ரீ W. இரத்தினகோபால் ஆஸ்பத்திரி றோட்டும் மணிக்கூட்டுத் தெருவும் சந்திக்கும் சந்தியில் பாலங் கட்டத் தொடங்கியதை இச்சங்கம் கண்டிக்கிறது.

2. நல்லூர் செட்டித் தெருவில் கல்லுப்போட்ட தொழிலாளிகள், தாம் சங்கத்து ஓவர்ஸியரான சின்னத்தம்பியாலேயே வேலைக்கு அமர்த்தப் பட்டார்கள் என்று எனக்குச் சத்தியக் கடிதாசி முடித்துப் பிரமாணிக்கஞ்செய்து கொடுத்திருப்பதாலும்,

(b) அச் சத்தியக் கடிதாசிகளின்படி அத்தொழிலாளிகள் வேதனம் ஷை சின்னத்தம்பியாலேயே கொடுக்கப் பட்டிருக்கிறது என்றும், இன்னும் அவர்களுக்கு வேதனம் கொடுக்கவேண்டி இருக்கிறது என்று காட்டப்பட்டிருக்கிற படியாலும்,

(c) 1935 ம் ஆண்டு பிப்ரவரிமாதம் 15 ம் தேதி யான் கேட்ட கேள்விகளுக்குப் பதிலிறுத்த சங்கத் தலைவரின் கூற்றுப்படி V. S. கந்தையா என்பவரே நல்லூர் செட்டித்தெருவுக்குக் கல்லுப்போடும் தொழிலை மேற்கொண்ட ஒப்பந்தகாரர் எனினும், அன்னவரைத் தமக்குத் தெரியாது என்று ஷை தொழிலாளிகள் தமது சத்தியக் கடுதாசிகளில் பிரமாணம் செய்து தந்திருப்பதாலும்,

(d) தெருக்களுக்குக் கற்போடும் வேலை உண்மையில் ஒப்பந்த காரரால் மேற்கொண்டு செய்யப்படுவதில்லை, வேலைப் பகுதி அதிகாரிகள் அநுசரணையோடு சங்கத்து ஓவசியர்மாராலேயே செய்யப்படுவது, அவர்கள் ஒப்பந்தங்களைத் தங்களது ஆள் ஒருவருடைய பேருக்கு எழுதுவித்துத் தாமே வேலைகளை நடாத்துகின்றனர் என்ற அபிப்பிராயம் பொது ஜனங்களிடையே வெகுவாசப் பரவியிருப்பதாலும்,

பின்வரும் விஷயங்களைப்பற்றி விசாரணை புரிந்து சங்கத்திற்கு ஓர் அறிக்கை வெளியிடுமாறு ஓர் விசாரணைச் சபையை நியமிக்க வேண்டும் என்று நான் பிரேரிக்கிறேன்.

(a) ஷை சத்தியக் கடுதாசிகளிற் காட்டப்பட்டுள்ள வைூல்கள்யாவும் உண்மையா?

(b) வேலைப்பகுதி அதிகாரியின் அநுசரணையுடன் சங்கத்து ஓவசியர்மார், ஒப்பந்தங்களைத் தமது ஆட்கள் பேரில் எடுத்து அவ்வேலைகளைத் தாமே செய்கின்றனரென்பது உண்மையா?

ஸ்ரீ பொன்னம்பலம் பின்வரும் கேள்விகளைத் தாம் கேட்கப் போவதாகவும் அறிவித்தல் கொடுத்திருக்கின்றார்.

1. காணிவரி அறவிடும் உத்தியோகத்தர் யாவரும் 1933 ம் ஆண்டுக்குத் தம்மாற் சேகரிக்கப் பட்ட பணத்தொகையைக் காட்டி விட்டார்களா?

2. இல்லையேல், 1933 ம் ஆண்டுப் பணத்தைக் கட்டாதவர்களின் பெயர்கள் யாவை? அவர்க்கு மாறாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது?

3. ஒரு றோட்டில் குவிக்கப்பட்ட கல்லுக்குவியல், 1934 ம் ஆண்டு செப்டம்பர்மாதம் முதலாந்தேதி தொடக்கம் 1935 ம் ஆண்டு மார்ச்மாதம் 31 ந் தேதி வரையில் வேறு றோட்டுக்களுக்குத் திருப்பி ஏற்றிச் செல்லப் பட்டதா?

4. அப்படியானல், இப்படித் திருப்பி ஏற்றுதற்கான செலவு எவ்வளவு?

5 ஒவ்வொரு றோட்டுக்கு இவ்வளவு இவ்வளவு "கியூப்" கற்கள் தேவை என்று ஏற்கெனவே மதித்துக் கணக்கிடப் பட்டுள்ளது. ஆனல் போதிய அளவுக்குக் கணக்கிடாமல் கவலையீனமாக இருப்பதற்குப் பொறுப்பாளியார்?

6. நாடோறும் சங்கக் காரியாலயத்தில் ஓவசியர் சின்னத்தம்பி என்ன செய்கிறார்? அவரின் வேதனம் சமீபகாலத்தில் உயர்த்தப்பட்டதா?

7. மின்சாரப் பகுதி அதிகாரி ஓர் தினசரிக் குறிப்புப் புத்தகம் வைத்து அதில் தமது உத்தியோக சம்பந்தமான விஷயங்களை நாடோறும் குறித்து வருகின்றாரோ?

8 இல்லையேல் அத்தகைய ஓர் குறிப்புப் புத்தகம் வைத்திருக்க வேண்டுமென ஷை அதிகாரிக்குக் கட்டளை இடுவாரா? அப்புத்தகத்தை அங்கத்தவர்கள் பார்வையிடுதற்காக 14 நாட்களுக்கு ஒருமுறை அங்கத்தவர்களிடம் தலைவர் கொடுப்பாரா?

### அந்த 14 கேள்விகள்.

ஸ்ரீ பொன்னம்பலம் அவர்கள் முன்னர் 14 கேள்விகளைக் கேட்கத் தலைவர் அவற்றை நிராகரித்து விட்டமை ஏற்கெனவே நாம் அறிந்துள்ளதாகும். தலைவர் செய்தமை நீதியோ என்று ஸ்ரீ பொன்னம்பலம் சங்கத் தலைவர்க்கு மாறாகச் சுப்பிரீம் கோட்டில் வழக்குத் தொடர்வார் என்று அறிகிறோம்.

### ஏனைய பிரேரணைகள்.

6-ம் வட்டாரப் பிரதிநிதியான ஸ்ரீ K V. சின்னத்துரை பின்வரும் பிரேரணைகளைத் தாம் எடுத்தாளப் போவதாக அறிவித்தல் கொடுத்துள்ளார்

1. பொதுஜனங்களின் உபயோகத்துக்காக யாழ்ப்பாணம் புகைரதஸ்தானத்துக்கு அணித்தாக ஓர் மலகூடம் கட்டுதல் வேண்டும்.

2. ஸொக்கனி பெற்றோல் குதத்தில் இருந்து ஆரியகுளம் சந்தி வரைக்கும் போவதும், ஸ்ராங்லிறோட்டு என்று சொல்லப் படுவதுமான குறுக்குத்தெருவுக்கு மின்சாரவெளிச்ச வசதிகள் உதவப்படல் வேண்டும்.

3. கன்னாதிட்டி றோட்டுக்கு இப்போது மின்சார வெளிச்சத்தம்பங்கள் நாட்டப் பட்டிருக்கின்றன. தாமதமின்றி அந்த றோட்டிற்கு மின்சார வெளிச்ச வசதிகள் உதவப்படல் வேண்டும்.

4 சங்கத்தில் மாதச் சம்பளம் அல்லது வருடச் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் நகரசங்கத் தெரிவிலோ அரசாங்கசபைத் தெரிவிலோ ஈடுபட வொண்ணாது அத்தெரிவுகளில் தத்தம் வாக்குச் சம்மதங்கள் மாத்திரமே கொடுக்கலாம். இவ்வுத்தியோகத்தர்கள் இலங்கை அரசினரின் பொது விதிகளில் 365 ம், 366 ம், 366 (a) ம் இலக்கப் பிரமாணங்களுக்கமைய நடத்தல் வேண்டும்

---

### தூஷித்ததாக வழக்கு

தொண்டைமானாற்றில் இருப்பவரும் பிரபல வியாபாரியுமான திரு. வீரகத்திப்பிள்ளை இராசசேகரம் என்பவர் தம்மைச் சென்ற பெப்ரவரிமாதம் 9-ம் திகதியன்று தூஷித்ததாகச் சின்னக்கண்டு பெண் சினியம்மாவினால் தொடரப்பட்ட வழக்குச் சென்ற சனிக்கிழமை பருத்தித்துறைப் பொலிஸ் கோட்டில் நீதிபதி திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வாதி சார்பாக திரு சிறீஸ்கந்தராசா, திரு. தனபாலசிங்கம் ஆகிய இருவரும் பிரதிவாதி சார்பாக திரு. கே. மகாலிங்கமும் ஏற்பட்டிருந்தனர். விசாரணையின் இறுதியில் பிரதிவாதி சுத்தவாளியாகக் காணப்பட்டதால் விடுதலை செய்யப்பட்டார்.

---

## ஏககோத்திர நெல்.

—:§:—

### அதன் அபரிமிதமான பயன்.

(இலங்கைக் கிருஷிகப்பகுதி வெளியீடு)

நீங்கள் நெல்லு வெள்ளாண்மையிலிருந்து நல்ல விளைவைப் பெற விரும்பினல், ஏககோத்திர நெல்லையே விதையுங்கள். அது கூடிய விளைவையும் நல்ல நெல்லையும் தருவதோடு, அதிகமான பணவருவாயையும் தரும்.

ஏககோத்திர நெல்லென்றால் என்ன? இது ஏனைய நெற்களைப் போற் கலப்பில்லாமல் ஒரே இனத்தைச் சேர்ந்ததாயும் கலப்பு நெல்லினும் பார்க்கக் கூடிய விளைவைத் தருவதாயுமுள்ளது. உங்களிற் சிலர் நெல் விளைந்தபின் வயலுக்குப் போய் அங்கே பெரிதாயும் அதிக மணிகளையுடையனவுமான நெற் கதிர்களை அடுத்த போக விதை நெல்லுக்கு எடுப்பீர்கள். கிருஷிகப் பகுதியாரும் அவ்வாறே செய்தார்கள். ஆனல் அவர்கள் இந்த நல்ல கதிர்களை எடுத்ததோடு நில்லாமல்; மறு நெல்லோடும் இவற்றை விளைவில் ஒத்துப் பார்த்தார்கள். அப்படிப் பார்க்கும்போது இந்தக் கதிர்களிலுள்ள நெல்லுக்கும் மற்ற நெல்லுக்கும் அதிக வித்தியாசமில்லையெனக் கண்டால், அக்கதிர்களைத் தள்ளிவிட்டு வேறுசில கதிர்களைத் தெரிந்தெடுப்பார்கள். இவ்வாறு ஒத்துப்பார்த்துக் கடைசியாக அந்தக் குறிச்சியிலுள்ள எல்லா இனத்திலும் பார்க்கத் திறமான ஒரு இனத்தைக் கண்டெடுத்தார்கள். பின் அந்த இனத்தை மாத்திரமே விதை நெல்லாக வைத்து வேறு இனம் இவற்றோடு சேர்ந்து இவற்றின் விளைவைக் குறைக்காதவாறு தடுத்துவந்தார்கள். இதுவே ஏககோத்திர நெல்லைப் பெறும் வழி. ஆதலாற்றான் இந்த ஏககோத்திர நெல் ஏனைக் கலவன் நெற்களிலும் பார்க்கச் சிறந்தது என நாம் அறிந்து கொண்டோம்.

ஏககோத்திர நெல் விதைப்பதால் விளைவு அதிகமாவதன்றி வேறு நன்மைகளுமுண்டு. நெற் பயிர்கள் எல்லாம் ஒரே வயதுடையனவாய் வளர்ந்து ஒரே காலத்தில் வெட்டக் கூடியனவாயுமிருக்கும். விதைத்த நெல்லும் அப்படியே ஒரே காலத்தில் முளைப்பதோடு, விசேஷமான பயிராயும் வளரும். ஏககோத்திர நெல் பார்வைக்கொரே விதமாயிருப்பதால் கலவன் நெல்லினும் பார்க்க நல்ல விலைக்கும் விற்கப்படும் இப்போ அதன் பயனை அறியமுடியாது போனலும் நாங்கள் சீக்கிரத்தில் உணரப்போகும் இன்னும் ஒரு சிறப்பு இந்த ஏககோத்திர நெல்லிடத்துண்டு.

நெல்லுக்காக நாம் அன்னிய நாடுகளை எதிர்பாராது, நாமே நமது நெல்லை விளைவிக்கவேண்டி வருங் காலத்து, நகரப்பகுதிகளிலுள்ளவர்கள் நாடுகளிலிருந்து நெல்லை வாங்காது அரிசியையே வாங்குவார்கள். தனது தேவைக்கு மேற்பட்ட நெல்லை விளைவிக்கும் ஓர் கிராமவாசி மிஞ்சிய நெல்லை ஓர் ஆலைக்கு விற்பான். அந்த ஆலை அந் நெல்லை நகரவாசிகளுக்கு அரிசியாக்கி விற்கும். அப்போது ஆலைகள் எல்லாம் ஒரே இனத்து நெல்லையே வாங்க விரும்பும். இனம் பலவிதமானல் இந்நெற்கள் எல்லாம் அந்த ஆலை சக்கரத்துவாரங்களில் நன்றாய்ச் செறிந்து வேலைசெய்யப்பட மாட்டா. அப்போது ஆலைக்காரர் பலவிதமான இனமுடைய நெற்களை வாங்க மறுப்பார்கள், அல்லது குறைந்த விலைகொடுத்து வாங்குவார்கள். ஏககோத்திர நெல்லோ இனத்தாலும் அளவாலும் ஒரே தன்மை உடையன.

ஒரு காரியம் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டும். ஏககோத்திர நெல் கலவன் நெல்லினும் பார்க்கச் சிறந்ததாய் எப்போ இருக்குமென்றால் அது மற்ற நெல்லோடு கலவாது தான் தனித்துத் தன்னினமாக நிற்கும் வரைக்கும் தான். ஆனதால் உங்களுக்குத் தேவையான நெல்லை ஆண்டுகள் தோறும் கிருஷிகப் பகுதியாரிடமாவது அல்லது அவர்களின் மேற்பார்வையின் கீழ் கமக்காரரால் விளைவிக்கப்படும் நெல்லையாவது வாங்குங்கள். அப்போதுதான் அவை உண்மையான ஏககோத்திர நெல்லென நம்பலாம். மற்ற நெல்லோடு இந்த நெல் கலந்தால் அதன் பிரயோசனமெல்லாம் பாழாய்விடும்.

ஓர் நெல், நாட்டு ஏனைக் கலவன் நெல்லினும் பார்க்க நூற்றுக்கு 15 விதம் சிறந்ததாயிருந்தால்தான், ஏககோத்திர நெல்லென்னும் பெயரைப் பெறும். சில இந்த மதிகத்திலும் கூட விளையக்கூடியன. அனுராதபுரத்தில் வெள்ளை இளங்கலையன் என்னும் நெல்லு ஏக்கருக்கு 70 புசல் விதமும், கல்முனையில் பச்சைப்பெருமாள் 60 புசல் விதமும், வட்டப்பொலாவில் தேளநெத்தி 50 புசல் விதமும் விளைகிறது. ஆகையால் உங்கள் நாட்டுக்கும் இணங்கிய ஏககோத்திர நெல் உண்டு. உங்கள் கிருஷிகப் பகுதிப் பரிசோதகரிடம் அதை நீங்கள் வினவி அறியாது ஏன் இன்னும் வாளாவிருக்கிறீர்கள்!

---

## சிங்களராட்சியின் பயன்!

—):×:(—

### நெல்லின்மீது தீர்வை: அரிசிமீது இல்லை.

—:o:—

### தமிழ்மக்களுக்கோர் விண்ணப்பம்.

திரு. C. S. இராஜரத்தினர்.

நெல்லின்மீது தீர்வையை இச்சந்தர்ப்பத்தில் உயர்த்தவொண்ணாது: உயர்த்தினல் ஏழைமக்கள் பாடு திண்டாட்டமாய் விடும் என்று நம்மவர்கள் கூட்டம் கூட்டிப் பேசினர். சங்கங்கள் சபைகள் ஓலமிட்டன; நமது பிரதிநிதிகள் சிங்கள மந்திரிமாரையும் அங்கத்தவர்களையும் இரந்தனர். ஆனல் அந்தோ எமது பேச்சு, ஓலம், இரங்கல் யாவும் செவிடன்காதிலூதிய சங்கநாதம் எனவும், ஆற்றிற் கரைத்த புளியெனவும் சிங்களமக்கள்—இல்லைச் சிங்களத் தலைவர்பால் முடிந்தன! மட்டக்களப்பினரை நன்மைப் படுத்துதற்காக அரசாங்கசபையின் பெரும்பான்மையினராகவுள்ள சிங்களப் பிரபுக்கள் நாம் பாவிக்கும் நெல்மீதுள்ள வரியை இருமடங்காக உயர்த்திவிட்டனர். இவர்கள் நெல்லுக்குத் தீர்வையை உயர்த்தி, அரிசிக்கு அதனை உயர்த்த மறுத்தமை இவர்களது மனப்பாங்கை எமக்குத் துலாம்பரமாகக் காட்டா நிற்கிறது; அதிகாரம் கிடைத்தால் இவர்கள் அதனை எப்படி உபயோகிப்பார்கள் என்பது எமக்கு இப்போது நன்கு விளக்குகின்றது. அற்பனுக்கு பௌஜு வந்தால் அர்த்தயாமத்திற் குடைபிடிப்பான் என்ற நிலைமையில் நம் சிங்களப் பிரபுக்கள் இப்போது நிற்கின்றார்கள்.

தமிழ்மக்களாகிய நாம் இந்த டனோமூர் அரசியற்றிட்டத்தை ஏற்கவில்லை. அதனை வேண்டாம் என்று நிராகரித்தேம் எனினும் பிரிட்டிஷ் அரசினர் சிறுபான்மையினராகிய எம்மைப் பெரும் பான்மையினரான சிங்களரிடம் ஒப்புவித்துவிட்டனர். ஆனல் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காகத் தேசாதிபதியிடம் விசேஷாதிகாரங்கள் சில அளிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தவராகிய நாம் இப்போது செயற்பாலது ஒன்றுண்டு. வடமாகாணத்தில் உள்ள ஒவ்வோர் சபையும், ஒவ்வோர் கிராமச் சங்கமும், சிங்கள அங்கத்தவர்களின் செய்கையைக் கண்டித்து, இது விஷயத்தில் விசேஷாதிகாரத்தைப் பிரயோகிக்குமாறு எமது தேசாதிபதி அவர்களைக் கேட்கவேண்டும்.

சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக அளிக்கப்பட்டிருக்கும் விசேஷ அதிகாரத்தைத் தேசாதிபதி எவ்வாறு உபயோகிக்கின்றார் என்பதையறிய இதுவோர் நல்ல சந்தர்ப்பமாகும். அரசாங்கசபையில் தமிழ் மக்களாகிய எமக்குப் பெரும் நீதியீனம் நடந்திருக்கிறது. இந் நீதியீனத்தைத் தடுத்தல் வேண்டும். எமது பிரதிநிதிகள் நால்வரும் இது விஷயமாகத் தேசாதிபதியைக் கண்டு அவரின் விசேஷாதிகாரத்தைப் பிரயோகிக்கும்படி வற்புறுத்தல் வேண்டும். எமது மாகாணத் தலைவரும் தம் பரிபாலனத்தின் கீழ் உள்ள மக்கள் இப் புதிய வரியினல் படவிருக்கும் கஷ்டநஷ்டங்களை எடுத்துத் தேசாதிபதிக்கு விளக்குவார் என்று நம்புகின்றோம்.

இலங்கைத் தமிழ் மக்களாகிய நாம் அரசியல் விஷயமாக எமது நிலைமையை நன்குணரவேண்டும் தனித்தொகுதி மூலம் எமக்கு மூன்றில் ஒருபகுதி ஸ்தானங்கள் அரசாங்கசபையிற்கிடைக்கக்கூடிய அரசியற்றிட்டம் வேண்டுமென நாம் கிளர்ச்சி செய்தல் வேண்டும். நாம் இதுகாறும் சிங்களரை நம்பினேம். அதனல் இப்போது காலை நீயென்றெண்ணிக் கடுவழி நடந்த மானது நிலையை எய்திவிட்டோம். நாம் எல்லோரும், ஒற்றுமை பூண்டு சாதிய அபிவிருத்தியின் பொருட்டு உழைக்கவேண்டும். சகல சாதியார்க்கும் நீதி வழங்கக்கூடிய ஆற்றல் சிங்களரிடம் இல்லை. பிரிட்டிஷ் அரசினர் இப்போது அளித்துள்ள புதிய அரசியலை ஒழித்துச் சகல சமூகத்தினர்க்கும் பட்சபாதமின்றி நீதியை வழங்கக்கூடிய புதிய அரசியற் றிட்டம் ஒன்றை நல்குவாராக.

# உபதேச காண்டம்.

பதினைந்தாவது

## கூர்மாவதாரச் சருக்கம்.

பூர்வத்தில் தேவரும் அசுரர்களும் தாங்கள் நரை திரை மூப்பின்றி இன்னும் நீடித்தகாலம் வாழவேண்டுமென்ற நோக்கங்கொண்டாராய் ஒருங்குசேர்ந்து தேவர் கோனாகிய இந்திரனிடம் போய் "விண்ணவர் கோவே, நாங்கள் நரை திரை மூப்புச் சாக்காடென்னுமிவைகளைத் தவிர்த்து வாழ்வதற்கு விருப்பங்கொண்டேம்; அப்படி வாழ்தற்குப் பாற்கடலிலுள்ள அமிர்தமே சிறந்த மருந்தாகும்; ஆதலின் அந்தப் பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைக் கொள்வதற்குத் துணைபுரிதல் வேண்டும்" என்று கேட்டனர். இந்திரனும் அவர்களுடைய கேள்விக்கு இசைந்தான்; உடனே அவர்கள் விருபாலரும் மந்தரமலையைப் பெயர்த்தெடுத்து மத்தாகவும் வாசுகியென்னும் பாம்பை நாணாகவுங் கொண்டு அம்மலையைக் கடன் மத்தியில் நிறுத்தி நாண்பூட்டிப் பாற்கடலைக் கடையத் தொடங்கினர்; கடையும்போது மந்தரமலையாகிய மத்துப் பாதலத்திற் பொறுத்துச் சாய்ந்தது; அதனை நிறுத்திக் கடலைக் கடைதல் தேவர்களாலும் அசுரர்களாலும் இயலாதாக, அவர்கள் உடனே காவற்கடவுளாகிய நாராயணமூர்த்தியை அடைந்து வணங்கி, "சகல உலகங்களையும் அவ்வுலகங்களிற் பொருந்திய சராசரங்களையும் காத்தருளும் பெருமானே, நீரே எல்ல மனி; உம்மையன்றி உலகம் இயங்குதல் முடியா; நீரே சிருட்டிகர்த்தாவாகிய பிரமதேவரை உமது உந்திக்கமலத்துத் தோற்றுவித்துப் படைத்தற்றொழில் நடைபெறச் செய்தீர்; எங்கட்கு யாதாயினும் இடர் நேருங்கால் உம்மிடமல்லாமல் வேறுயாரிடம் போய்ப்புகுவேம்" என்று பலவாறு துதித்தனர்.

அப்பொழுது நாராயணமூர்த்தி அத்தேவர்களையும் அசுரர்களையுங் கருணையுடன் பார்த்து "தேவிர்காள், அசுரர்காள், உங்கட்கு நேர்ந்த ஆபத்து என்னை; இயம்புமின்; உடனே அகற்றிவிடுவேம்" எனலும், அவர்கள் மகாவிஷ்ணுவை மீட்டும் பணிந்து "எந்தாய், நாங்கள் நரை திரை மூப்புச் சாக்காடின்றி வாழ்தல் வேண்டுமென்ற ஆசையினால் மந்தரமலையை மத்தாகவும் வாசுகியை நாணாகவுங் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைப்பெற முயன்றேம். அப்படிக் கடையும்போது மந்தரமலை பாதலப்புக்கு வீழ்ந்துகிடக்கின்றது; அதனைப் பழையபடி நிறுவிப் பாற்கடலைக் கடைதற்குத் தேவரீர் அருள்செய்தல்வேண்டும்" என்றனர். திருமால் அசுரர்கட்குத் துணைசெய்யத் திருவுளங்கொண்டு, உடனே கருடன்மீது இவர்ந்து பாற்கடலையடைந்து பெரிய ஆமையின் வடிவுகொண்டு கடலுட் புகுந்து மந்தரத்தைத் தொன்மைபோல் நிறுவி நாண்பூட்டிக் கடையத்தொடங்குதலும் மந்தரம் பின்னருஞ் சாய்ந்தது; அதுகண்ட திருமாலாகிய கூர்மம் உடனே எண்ணிறந்த கைகள் தன்னிடத்திற் றோன்ற அக்கைகளினால் மலையை நிலைகுலையவிடாது தடுத்துப்பிடித்துக்கொள்ளுதலும், வாசுகியாகிய நாணை அம்மலையில்மாட்டித் தேவர் ஒருபுறத்தும் அசுரர் மற்றப்புறத்துமாக ஈர்த்துக் கடைந்தனர்.

கடையும்போது முழுமுதற் கடவுளாகிய பரமேசுவரனை அத்தேவர்களும் அசுரர்களும் சிந்தைசெய்யாத தோஷத்தினால், கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டவாறு அமிர்தத்திற்குப் பதிலாகக் கொடிய ஆலாகலம் எனப்படும் நஞ்சு அக்கடலில் பிறந்து பொங்கியெழுந்து உலகம் முழுவதிலும் பேரிருள்பாவச் செய்துகொண்டு அசுரரையுந் தேவரையுந் தாக்கது; தாக்தலும் தேவரும் அசுரரும் அதற்குப் பயந்து ஓடிச்சென்று விஷ்ணுமூர்த்தியிடம் அடைக்கலம் புகுந்து தம்மைக் காத்தருளும்படி ஓலமிட்டனர். கொடிய விடம் வரும்வேகத்தைக்கண்ட திருமால், அதனைத் தாம்தடுத்தல் அரிதெனவுணர்ந்து அமரரையும் அசுரரையும் பார்த்து "இக்கொடிய விடத்தின் வெம்மையைத் தீர்த்தல் எம்மால் முடியாது; பசுபதியாகிய பரமசிவனுடைய திருவருளாலன்றி வேறெதனாலும் இதனைத் தடுத்தல் இயலாது; ஆதலால் எல்லாரும் அவனிடஞ் செல்வேம், வருதிர்" எனலும் அப்படியே அனைவரும் திருமாலைத் தொடர்ந்து கயிலாயகிரியை யடைந்தனர்; உலகமாதாவோடு எழுந்தருளியிருக்கும் கயிலாசபதியின் சந்நிதியிற் சென்று வணங்கி ஓலமிட்டனர்:

"வேதநாயக, விளங்கொளி வெவ்வழற் பிழம்பாஞ்
சோதிநாயக, சுடர்க்கொடி மரகதம் படர்ந்த
பாதிநாயக, பாரபர, பழமறைக் கெட்டா
ஆதிநாயக, அஞ்சினேம் அபயம்! நின்னபயம்!!"

[வேதங்களுக்குத் தலைவரே, வெவ்விய ஒளியோடு கூடிய சோதிப்பிழம்பாகவுள்ளவரே, பார்ப்பதியோடுகூடி அர்த்தநாரீசுரராய் எழுந்தருளியவரே, பராபர மூர்த்தியே, பழையனவாகிய வேதங்கட்கு அதீதராய் நிற்கும் ஆதிக்கடவுளே, பொல்லாத விடம் எங்களைத் தாக்குவருதலின் அச்சமடைந்தோம், தேவரீருக்கு அடைக்கலம்! அடைக்கலம்!!]

"வித்து மாயினை, அங்குரம் விடுத்தவெஞ் சினையின்
கோத்து மாயினை, அவ்வழி உயிர்க்குல மனைத்திற்
கோத்து நின்றனை, ஆதலின் உனக்கிது பரமால்,
சத்தனே, இறப் பஞ்சினேம் அபயம்! நின் அபயம்!!"

[விதையாகவும் விளங்கினீர், (அவ்விதையிலிருந்து தோன்றும்) முளையாகிப் பரந்த கூட்டமான கிளைகளுமாயினீர், அந்தமுறைப்படி சீவராசிகளாவற்றினும் வியாபித்துள்ளீர், அந்த நியாயத்தினால் எங்களைக் காத்தல் தேவரீருடைய கடமையாகும், பரமபிதாவே, சாகப் பயப்படுகின்றேம், தேவரீருக்கு அடைக்கலம்! அடைக்கலம்!!]

இவ்வாறு தேவர்களும் அசுரர்களும் தோத்திரஞ்செய்தலும் பரமபதி ஒன்றுமறியார்போல் அவர்களை நோக்கி "விண்ணவர்காள், உங்கட்கு நேர்ந்த விபத்தென்னை, விளம்புதிர்" எனத் திருவாய்மலர்ந்தருளுதலும் தேவர்கள் அசுரர்கள் அப்பெருமானை மீளவும் வணங்கி "கருணையங்கடலே எந்தாய், அமிர்தத்தைவேண்டிப் பாற்கடலைக் கடையத்தொடங்கிய நாங்கள் தேவரீரைச் சிந்தியாமையினாற்போலும், கொடிய விடமானது அக்கடலிற் பிறந்து எங்களைத் தாக்கலும் நாங்கள் அதற்குப் பயந்து ஓடிவந்து தேவரீரிடம் சரண்புகுந்தோம்; அக்கொடிய விடத்தைத் தடுத்துத் தமியேங்களைக் காத்தருள்க" எனப்பிரார்த்தித்தனர். ஈசுவரன் தமது இடப்பாகத்திருந்த இறைவியைப்பார்த்துத் திருப்புன்முறுவல்பூத்து "எ, சுந்தர, ஈண்டுவருதி" யென்று பணிக்க, தொண்டராகிய சுந்தரர் பெருமான் முன்னிலையிற் பணிந்து விநயத்தோடு நின்றார்; இத்தேவர்கட்கும் அசுரர்கட்கும் இடர்செய்யும்படி தாக்குவரும் விடத்தின் வேகத்தை அடக்கி அதனைப் பற்றி இங்கே கொண்டுவருதி" யெனப் பணித்தருளுதலும், சுந்தரர் விரைந்துசென்று அந்நஞ்சினைப் பற்றிக்கொண்டுவந்து சிவபிரானுடைய திருக்கரத்திற் கொடுத்தலும் அப்பெருமான் அதனை அங்கையில் எற்றுத் திருவாயிலிட்டுக் கண்டத்து அடக்கினர்; பவளம்போன்ற கண்டங் கறுத்தது. அவ்வற்புதமனைத்தையும் பார்த்தபடி நின்ற அசுரரும் சுரரும் ஆச்சரியமுற்றாராய்ப் பெருமானைப் பலமுறை வீழ்ந்து வணங்கி எழுந்து துதித்து அவருடைய திருவருட்டிறனைப் பாராட்டினர். நஞ்சையுண்டு கறுத்தமையின் திருநீலகண்டரென்னும் திருநாமத்தோடு விளங்கும் பரமபதி காரணன்முதலாம் தேவர்கட்கும் அசுரர்களுக்கும் அருள்புரிதலும், அவர்கள் அவரைப் பணிந்து விடைபெற்று அகன்றனர்.

(தொடரும்)

### பொய்க் கைச்சாத்திட்டுப் பணத்தை அபகரித்தாராம்.

நெடுந்தீவுக் கிராமத்தைச் சேர்ந்தவரும் உப தபாற்றலைவருமாகிய மிஸ்டர் K. அப்பாத்துரை யென்பவர் 150 ரூபா தொகைகொண்ட நான்கு மணியோடர்களுக்குப் பொய்க் கைச்சாத்திட்டு அப்பணத்தை அபகரித்துக்கொண்டாரென்னுங் குற்றத்தின் பேரில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் ஸ்டேஷனில் அவருக்கு விரோதமாக வழக்குத்தொடரப்பட்டிருக்கிறது. சென்ற ஜனவரி மாதம் தொடக்கம் இற்றைவரையில் குறித்த எதிரி அகப்படாமல் மறைந்துள்ளனராம்.

---

### பாபு ராஜேந்திரர் தென்னுடுவிஜயம்

பாபு ராஜேந்திர பிரசாத் இந்தியா முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்ய உத்தேசித்திருப்பதற் கேற்ப பஞ்சாப், மத்திய மாகாணம், பேரார் முதலிய இடங்களில் இப்போது சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றார். ஜுலை ஆகஸ்டு மாதங்களில் அவர் தென்னாட்டுப் பகுதிகளில் விஜயஞ் செய்யக்கூடுமென்று தெரிகிறது.


## NOTICE OF SALE
### கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்.

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில்
இல. 5693.

சதிர்காமர் வேலுப்பிள்ளை காரைதீவு மேற்கு வழக்காளி.

1. ஆறுமுகம் வேலுப்பிள்ளை கைம்பெண் அன்னம்மா
2. முருகேசு குருநாதர் கைம்பெண் சின்னப்பிள்ளை காரைதீவு மேற்கு. எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில் 1934-ம் ஆ. புரட்டாசி மாதம் 26-ம் திகதி 5693-ம் இலக்க தீர்வையின் பிரகாரம் இதன்பின்னுற் காணப்படும் ஆதனத்தை கொம்மிஷனர் கந்தையா முத்துக்குமாரு ஆகிய என்னால் 1935-ம் ஆண்டு சித்திரை மாதம் 27ம் திகதி சனிக்கிழமை குறித்த காணியிலிருந்து பின்னேரம் 3 மணிதொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பற்று காரைதீவுஇறை தங்கொடை பிடாரிக்கட்டை வயல் முக்கம்பிட்டி என்னும் வடற்காணி செற்பரப்பு 35 குளி 4-ம். இதைம் எல்லைஇதக்க முருகேசு பெண் பாறுபதியும் விசுவர் கந்தையாவின் ஆதனங்கள் வடக்கு சின்னப்பர் முருகேசுவும் பங்காளரின் ஆதனங்கள், மேற்கு குளமும் அதற்குச் சேர்ந்தமுடிக்குரியபிலமும், தண்ணீர் ஓடும்வாய்க்காலும், தெற்கு தண்ணீர் ஓடும்வாய்க்காலும் கந்தையா பெண் தங்கமுத்துவின் ஆதனமும், இதடங்கலும்.

க. முத்துக்குமாரு, கு. வே. நாகலிங்கம்.
கொம்மிஷனர்கள்

காரைதீவு
3—4—35.

Mis 6 8-4-35.


---

## நீதியையும் தருமத்தையும் விரும்பிய பயனுடையவர் குணத்தை உலகத்தார் புகழ்வர்.

---


தலைவலியுற்றபோது

# லிட்டில்ஸ் ஓரியெண்டல் பாம் தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும்

தேயுங்கள்!

## தலைவலி உடனே மாறிவிடும்

அதுவுமன்றி இது இந்தியாவில் இந்தியர்களாலே செய்யப்படுவது.

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.

(Y 16. 1-4-34—31-12-35)

---

# யாழ்ப்பாணம் ஐக்கியலாப்நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா வீதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிருப்பு சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 வீத வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "சாவுகனம்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாறறத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் கொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) நகைகளையும் பாகமபாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடன் கொடுக்கலாம். (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மனேஜர்.

(Y 152. 21.11.34—20 11.35) (இ.)

## நாமும் நமது மதமும்

(கா. செல்லையா எழுதுவது)

அலைசெறி கடல்சூழ் முநில மெங்கினும் பரந்து கிடக்கும் பலவேறு மதங்களையும் தன்னுளடக்கியும்,

'கன்றாய் ஞாலங் கடந்துபோய் கல்லிக்கிரிய மெல்லாமீர்த் தொன்றாய்க் கிடக்கவரும் பெரும் பாழுலப்பிலகனை யணர்த்து சென்றுங்கின்ப துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்று லன்றேயப்போ தேவீடாகவே விடுவிடாமே" எனவும்,

"விடென்றதைதரு சொற்குப் பொருளை விடுத்து" விடுதலையாவது பந்த நீக்கமாதலின் பந்தமொன்று உண்டென்பதும், அது உண்டாகவே பந்தத்தினுட் கட்டுப்பட்டிருந்து அதினின்றும் விடப்படுவோர் உண்டென்பதும், பந்தம் சடமாகையினாலும் பந்தமுடையோன் சுதந்திரமின்மையினாலும், உயிர்களுக்குப் பந்தத்தை நீக்கிப் பேரின்ப முத்தி கொடுப்பான் ஒரு சுதந்திர கர்த்தா உண்டென்பதும்,

"நவிலுங்கால் மேல்கீழ் நடுப்பக்க மெங்கும் சிவமொழிய வேறில்லை தேர்"

என ஆன்றோர் பொறித்திருப்பவும், தனக்கு வழித்துணையாகக் குடும்ப பாரம் தலைக்கொண்டு அதன்பாதுகாப்பின் ஏக்கத்தால் நெடுங்காலம் அறிவு மழுங்கி இனி எக்காலத்தில் யாண்டு ஓர் சுகங் கூடப்பெறுவலென்று ஏக்கமுற்று உன்னயர்ந்து நோக்கி இருப்பவர்க்கு அவரவர் ஏக்கத்தைச் சிறிது சிறிதாய் நீக்கிப் படிப்படியாய்ப் பாசத்தைப் போக்கிப் பரமுத்தி அடைவதற்கேதுவாய் ஆங்காங்கு ஆலயங்களை உண்டாக்குவதற்கு உறுதுணையாயும் ஜடஜீவபரலக்ஷணங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கி நிற்பதும் நமது மதமேயெனப் பெருமிதங் கொண்டு ஆநந்தக் கூத்தாடுகின்றோமேயன்றி, காலச் சக்கரம் சுழன்று கொண்டு வருவதையும் நமது ஆலயங்களில் அறிவீனர்களால் நடாத்தப்பட்டு வரும் அக்கிரமச் செயல்களையும், போசைப் பித்தர் கையிற் சிக்கிய சில ஆலயங்கள் படும்பாட்டையும், வியாச்சியங்கள் தொடுக்கப்பட்டுவரும் துக்ககரமான செயல்களையும், காலத்துக்குக் காலம் வமாற்றப்பட்டுப் புறமதம் புகுவோரையும் தடுத்து நம் மதத்தவர் எத்தேயத்தாராயினும், எக்கோடியிலிருப்பினும் அவர்கள் ஓர் தாய் வயிற்றிற் ஜனித்த சகோதரர்களே என நன்குணர்ந்தும், நமது ஆலயங்கள் எத்தேசத்திலிருப்பினும் அவைகளைச் சட்டபூர்வமாய் நிறுவப்பட்ட ஓர் சபையாரின் ஆதீனத்துட்படுத்தி, அச்சபையார் மூலம் அவ்வவ்வூரிலுள்ள ஆலயங்களை அவ்வவ்வூரில், தெய்வபக்தி அடியார்பக்தி, சாந்தம் தயை, அவாவின்மை முதலிய சுகுணங்களோடு பொலிந்து விளங்குபவர்கள் சிலரைத் தெரிந்தெடுத்துப் பஞ்சகர்த்தாக்களாய் நியமித்து நடாத்தச் செய்து, அவ்வவ்வாலயங்களுக்குரிய வருவாய்களைப் பஞ்சகர்த்தர்கள் மூலம் சபையாரிடம் ஒப்படைத்து, இவ்வருவாயைக் கொண்டு நமது மதத்தை விருத்தியடையச் செய்யவும், நீறில்லா நெற்றிபாழ் என்பதையும் ஓராது சமயாபிமானம் சிறிதுமின்றித் திருநீற்றைப் புனைவது கூடச் சட்டை தொப்பி மாட்டித்திரியும் தங்களுக்கு ஏதோ அவமானமெனக் கருதிக் கைவிட்டுத் திரியும் இக்காலத்தைய சில புல்லறிவாளருக்குச் சமயாபிமானம் தலைக்கேறத்தக்க அறிவுச் சுடரைக் கொழுத்திச் சமய வொழுக்குத் தவறாது கைக்கொண்டு அதன்வழிநின்று கடைத்தேறுவதற்கும்,

"அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்னும் பொய்யாமொழியாரின் பொன்மொழிக்கிணங்க நடக்கவேண்டியவர்கள் காலத்தின் கோலத்தால் ஓதல், வேட்டல், ஏற்றல், ஆகிய இவற்றிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்து வருவதால் அவர்களையும் சிறிது அருட்டி, தாசி நடனம், பலியிடுதல் முதலிய அக்கிரமச் செயல்களைப் புரிந்து புனிதத்திற் குறைவிடமாய் இருக்கவேண்டிய ஆலயங்களை அசுசிப்படுத்தக் கங்கணங்கட்டி நிற்போரால் நடாத்தப்படும் ஆலயங்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் உற்சவகாலங்களில் பூசாகைங்கரியங்களைச் செய்யப் போவதில்லையென அவர்களுக்குள் ஓர் கூட்டத்தைக் கூட்டித் தீர்மானிக்கச் செய்யவும், எமது பிள்ளைகளை நமது பாடசாலைகளிலேயே கல்விகற்கச் செய்வதோடு

### காரைநகர் கற்பக விநாயகராலயம்.

மேற்படி ஆலயத்தில் பவவருஷம் பங்குனிமாதம் 24-ம் திகதி (6-4-35) சனிக்கிழமை முற்பகல் குமாரயோக ணமாகி யுவவருஷ சித்திரைமாதம் 1ம் தேதி (14-4-35) வருஷப்பிறப்புப் புண்ணிய தினமாகிய ஞாயிற்றுக்கிழமையிலன்று விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் ஆராதனைகளும் விசேஷமாக அலங்காரஞ் செய்ப்பட்டு வீதிவருதலும் நடைபெறுமென அறியலாமேன்.

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

சைவப்பிரகாசிகை (இரண்டாம் புத்தகம்)

சைவசித்தியா சாலைகளிலும் சைவக் கல்லூரிகளிலும் கல்வியிலும் மாணவர்களுக்குச் சமயபாடமாகப் பயிற்றும் வண்ணம் சைவப்பிரகாசிகை இரண்டாம் பாகமாகிய இப்புத்தகம் அச்சுவேலி, பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களால் இலகுவான வசன நடையில் நுட்பமாக எழுதப் பெற்றது. இதன்கண் விநாயகக் கடவுள் வல்லவனுக்கு அருள் செய்தது முதலாகச் சைவர்களுக்குரிய விசேட இலக்கணம் இறுதியாக கக. பாடங்கள் உள்ளன. குருக்கள் எழுதி வெளியிட்ட சைவப்பிரகாசிகை முதற் புத்தகத்தைப் படித்தபின் மாணவர் இதனைப் படித்தலாகும் பிரதி ஒன்றன் விலைசதம் 15. (அஞ 2½.) பிரதிகள் மேற்படி நூலாசிரியர் குமாரபிரம ஸ்ரீ ச. கு. வைத்தீசுவரசர்மாவிடத்தும் இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன. எமக்கனுப்பிய பிரதியை உவந்தேற்றும்.

---

சமய அறிவையும் புகட்டுவதற்கும் இன்னும் இவைபோன்ற சற்கருமங்களைச் செய்யவோ செய்விக்கவோ முன்வருகின்றோமில்லை. ஆனால் இவ்வகையான சில சற்கருமங்களைச் செய்ய விரும்பி சிலர் முன்வந்து ஓர் கூட்டத்தைக் கூட்டினாலோ ஓர் விஷயத்தை எடுத்துவிளக்கினாலோ குற்றங்களைந்து குணங்கொள்ளல் என்னும் சிரிய குணத்தைப் போக்கிலே போகவிட்டுக் குணங்களைந்து குற்றங்கொண்டு எங்கள் சமயாபிமானம் இவ்வளவுதான் என்பதையும் ஒரேசமயத்தவராகிய எங்களை சமயவொற்றுமை இத்திறத்ததென்பதையும் நாங்கள் செய்யும் விதண்டாவிவாதங்களினால் பலரறியச் செய்வதற்குமாத்திரம் பின்நிற்கின்றோமில்லை. சகோதரர்களே! புறச்சமயத்தவர்களுக்கிடையில் நடக்கும் இத்தகைய கூட்டங்கள், பிரசங்கங்களாயிட்டு ஏதேனும் விவாதங்கள் நிகழுகின்றனவா? நாங்கள் மாத்திரம் இப்படியான தர்க்கங்களில் இறங்கி எங்களை நாமகளே கெடுத்துக் கொள்வதோடமையாது ஒருவர்க்கொருவர் மனஸ்தாபப் படுவதற்கும் முக்கிய காரணங்கள் ஏதேனுமுண்டா? அடியார்கள் ஒன்றுகூடி அவனடியை நிதமும் போற்றிக் கடைத்தேறுவதற்கென்றே ஆலயங்கள் ஏற்பட்டனவன்றி அவைகளைத் தனக்கு ஆதாரமாகக் கொண்டு தன்னிரு விலாப்புடைக்க உண்டு களிப்பதற்கன்று என்பதை நன்குணர்ந்து, சமய விஷயத்தில் உண்டாகும் சுபலம் போறாமை பொறாமை இன்னசொல் பெருமை பாராட்டல் நானெனும் அகங்காரம் முதலிய துர்க்குணங்களை ஆழக்குழி வெட்டிப் புதைத்துவிட்டு ஒன்றுபட்டாலுண்டுவாழ்வு என்பதற் கொப்பச் சமயாபிமானம் ஒன்றினையே முக்கிய நோக்கமாய்க் கொண்டு நாமெல்லோரும் ஒன்று கூடித் தலைநிமிர்ந்து சமயத்தொண்டாற்ற முன்வருவோமேயானால் ஆலயங்களில் நடக்கும் அக்கிரமச் செயல்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடுவதோடு, நமது சமயம் மென்மேலும் அபிவிருத்தியடைவதற்குத் தடைக்கல்லாய் நிற்கக்கூடியது வேறு யாது? ஆகையாற் சைவநேயச்செல்வர்காள் பிரயோசனமற்ற தர்க்கங்களில் இறங்கிக் காலத்தை வீணாக்காமல் ஆக்க வேலையில் ஊக்கங்கொண்டு உழைக்க முன்வரும் சிரியரோடு சேர்ந்து உழைத்து நமது சமயத்தை அபிவிருத்தியடையச் செய்வதற்கு முன்வருமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் திருக்கருணை மழை பொழிவானாக.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக வுலகமெலாம்".

### சிசு மாதாவின் கர்ப்பத்தில் இருந்து ஐந்து அவஸ்தைகளுக்குட்பட்டு வருந்தும் விபரம்.

[அதமலை பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் எழுதுவது]

"என்றென்றெண்ணியிருக்கு மூழிபீடர்ப்பட்டிரு
மெறில்வரைச்சிழ்
ஒக்குமொருவன்றனைப்போலக்
கருப்பாசயப்பையுறைதலால்
மன்றவுக்கிமாக்தாழ்வான்வருத்தமென்ன
வருத்தியிடும்
இன்றகருப்பாசயவுதகவெள்ளக்கொள்ள
நிறையழிக்கே."

என்னும் பிரமாணப்படி

(முற்சனனவுணர்ச்சி காரணமாக இனியேனும் அனேக சற்கருமங்களைச் செய்து கடவுள் திருவடியை யடைவோம்; அதனால் பிறப்பு இறப்புக்களாலுண்டாகிய பெருங் கஷ்டத்தை நீக்கிக்கொள்வோம்; என்பது முதலாய பல) எண்ணங்களை நினைத்துக்கொண்டிருக்கும் உயிரானது; (மாதாவின் கருப்பைக்குள்ளே) கட்டுண்டிருக்கும் போது, அந்தக் கருப்பாசயப் பை தன்னை நான்கு பக்கத்திலும் உறுத்துவதனாலே, அழகு பொருந்திய ஒருமலையின் கீழே இருந்த ஒருவன் அதன் பாரத்தைத் தாங்க முடியாது துன்பப்படுவது போலத் துன்பப்படும். அந்தக் கருப்பாசயப்பையின் தண்ணீர் பூரித்து அந்த நீர் வெள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கும்போது, பெரிய கடலில் வீழ்ந்து ஆழ்ந்துவிடுகிறவன் துன்பப்படுவது போலத் துன்பப்படும். அத்தருணம் தான் நன்மைகள் செய்ய எண்ணியிருக்கும் உறுதிப்பாடுங் அழியத் தலைப்படுகின்றது.

"கருப்பாசயமேகட்டமாமதனிலநிகழ்கின்றதும்
புரிக்கமிசவுமோகமுற முன்னையுணர்வுமக்கிலையே [ய
மரிக்கதூலைக்கரும்பென வேயோனிவழியின்வலிதொலை
நெருக்கப்பட்டுநிலமிசையேதோன்றுமுயிருணிலை
யுடனே."

மேலே கூறிய கருப்பாசயத் துன்பமே கஷ்டமாம். பிரசூதவாயுவினால் மேல்கீழாகச் சிசு நிலைமாறி, அத்தருணத்தை முற்செனம உணர்ச்சியுங் கெட்டு ஆலைவாய்க் கரும்பு போல யோனித்துவாரத்தில் நெருக்குண்டு பூமியில் வருந்துன்பம் பெரிது. இவ்விதப் பிறவித் துன்பங்கட்கு மானிடன் முதலில் உட்படுகிறான்.

சிசு இவ்வாறு உற்பத்தியாகிப் பூரண உறுப்புக்களமைந்து வெளிவருதற்கு முன்னே ஒவ்வொரு நிலையிலும் அதற்கு ஆபத்து நிகழக்கூடும். அப்போது அது பின்னப்பட்டுவிடும். இதுபற்றியன்றோ எங்கள் பெரியாரும்.

"மானிடப்பிறப்பினுள்மாதாவுதரத்து
ஈனமிக்கிருமிச்செருவினிற்பிழைத்தும்
இருமதிவிளைவின்ஒருமையிற்பிழைத்தும்
மும்மதிதன்னுள்அம்மதம்பிழைத்தும்
ஈரிருதிங்களிலபேரிருள்பிழைத்தும்
அஞ்சுதிங்களில்முஞ்சுதல்பிழைத்தும்
ஆறுதிங்களில்ஊறலர்பிழைத்தும்
ஏழுதிங்களில்தாழ்புவிபிழைத்தும்
எட்டுத்திங்களில்கட்டமும்பிழைத்தும்
ஒன்பதில்வருதருதுன்பமும்பிழைத்தும்
தக்கதசமதிதாயொடுதான்படும்
துக்கசாகரத்துயரிடைப் பிழைத்தும்."

எனவே கருப்பாயசப்பை உறுத்தல், அதில் நீர் பூரித்தல், உதராக்கினியால் வேவுதல், பிரசூதவாயுவினால் முறித்துத் தள்ளுண்டல், யோனித்துவாரத்தில் நெருக்குண்டல், என்னும் ஐந்து அவஸ்தைகளுக்குச் சிசு மாதாவின் கர்ப்பத்தில் உட்பட்டு வருந்துவதாகச் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆகையாற்றான் "இன்னுமோர் அன்னைக் கருப்பையிலே வாமற்கார்." என்று மகான்கள் கடவுட்டியானஞ் செய்துவருகின்றார்கள். நாங்களும் அவ்வண்ணமே செய்துவருவோமாக.

### சாவகச்சேரிப் பொலிஸ் நீதிபதி.

மன்னார் பிறக்ராசன மிஸ்டர் பிலிக்ஸ் போல் அவர்கள் சாவகச்சேரி, பருத்தித் துறைப் பகுதிகளின் பொலிஸ் நீதிபதியாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### டாக்டர் அன்சாரி.

காங்கிரஸ் தேர்தற் பஞ்சாயத்துச் சபைத் தலைவரும், காங்கிரஸ் காரிய நிர்வாகசபை அங்கத்தவருமான டாக்டர் M A அன்சாரி அவர்கள் தப்பதவிகளிலின்று சுகயீனம் காரணமாக விலகிவிட்டார்.

### இலங்கை அரசினர் புகைரதப்பகுதி.

—:o:—

"ஈஸ்டர்" விடுதலைநாட்களின்பொருட்டு விசேஷ புகைரத ஒழுங்கு.

தமிழ் வருடப்பிறப்பின்பொருட்டு, ஏப்பிரல்மாசம் 13ந் திகதி ஒரு விசேஷ புகைரதம் பின்னேரம் 3மணிக்கு கொழும்புக் கோட்டைஸ்தானத்திலிருந்து காங்கேசன்றுறைக்குப் புறப்பட்டுச்செல்லும்.

ஏப்பிரல்மாசம் 17-ம் 18-ம் 22-ம் 24-ம் தேதிகளில், மேல்திகமான புகைரதம் இரவு 9 மணி 45 நிமிஷம் வரையில் கனுஓயா ஸ்தானத்திலிருந்து மருதாணைக்குப் புறப்பட்டுச் செல்லும்.

ஏப்பிரல்மீ 18ந்திகதி கோட்டை ஸ்தானத்திலிருந்து இரவு 7 மணி 50 நிமிஷம்வரையிற் புறப்படும் புகைரதம் வழக்கம்போல் பதுளைவரையிற் செல்லும், இரவு 9 மணி 40 நிமிஷம் வரையிற் கோட்டை ஸ்தானத்திலிருந்து புறப்படும் புகைரதம் கனுஓயா ஸ்தானத்திற்போய் நின்றுவிடும். கண்டிக்குச் செல்லும் பிரயாணிகள் குறித்த 9மணி 40 நிமிஷம்வரையிற் புறப்படும் புகைவண்டியிலேயே ஏறிச்செல்வார்களாக. ஏப்பிரல்மீ 18௳ இரவு 7 மணிக்கு, கோட்டை ஸ்தானத்திலிருந்து புறப்படும் புகைரதமும், அன்றிரவு 8 மணி 52 நிமிஷம் வரையில் மருதாணை ஸ்தானத்திலிருந்து புறப்படும் புகைரதமும் வழக்கம்போலவே, அடுத்தநாட்காலை முறையே 7 மணி 35 நிமிஷத்திலும் 12மணி 50நிமிஷத்திலும் காங்கேசன்துறை ஸ்தானத்தை அடையும்.

இன்னும் இவ்விஷயமான மாறுதல்கள் விசேஷ புகைரதப் போக்குவரவுகளைப்பற்றிய விபரங்களைப் புகைரதஸ்தானத்தில் மாட்டப்பெற்றுள்ள பெரிய விளம்பரத்திற் கண்டுகொள்க.

கொழும்பு
ஏப்பிரல் 5-1935 } E. W. ஹேட், புகைரதப்பகுதித் தலைவர்.
(G 1. 8 4 35.)

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்.

**இல. 6908.**

(1) ஆள்வான், கந்தையா காரைதீவுகிழக்கு (2) ஆள்வான். வேலுப்பிள்ளை - (மயினர்) ஆள்வான சின்னத்தம்பி, (மயினரின்) தந்துவகாரன் வழக்காளி.

எதிர்

(1) சந்தன் வேலன் (2) வேலன் கந்தன் காரைதீவு கிழக்கு எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6908-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் தண்டுக் காணியை 1935 ௵ சித்திரைமீ 10௳ புதன் கிழமை பிற்பகல் 4—30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த லேலத்தில் விற்கப்படும்:

காணி விபரம்.

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கில, காரைதீவில், களபூமியில் இருக்கும் காணி "கொட்டைப் புலம்" நிலப்பரப்பு இலாச்சம் 14⅝ இதிற் சொரியலாக நிலப்பரப்பு இலாச்சம் 6 ம் குளிகள் 14⅝ பனைமரங்களும் மற்றும் அதில் உள்ளவைகளும், எல்லைகள் கிழக்கு காசிநாதர் கந்தையாவின் ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு கனகசபை திருநாவுக்கரசுவுக்கும் பங்காளர்களுக்கும் உள்ள ஆதனம் தெற்கு கனகசபை திருநாவுக்கரசுக்கும் பங்காளர்களுக்கும் உள்ள ஆதனம். இதற்குள் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

R. VAITHEASPARAN IYER
கொம்மிஷனர்.

1935௵ பங்குனிமீ 10௳,
(Mis, 7 8-4-35)

---

## NOTICE OF SALE.

### விற்பனவு விளம்பரம்.

**இல. 3214.**

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 3214-ம் இலக்க வழக்கில் சககுதி ௵ தைமீ 30-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி சககுதி ௵ சித்திரைமீ 25-ந் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2—30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

விபரம்.

வண்ணார்பண்ணை மேற்கு இராமநாதர் கந்தையா கைம்பெண் செல்லம்மா வழக்காளி.

பூனகரி சேர்ந்த செட்டியகுறிச்சி இளையதம்பி சிவகாருண்யம் எதிராளி.

1932 ம் ஆ௵ மார்கழிமீ 14-ந் திகதி யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 3214-ம் இலக்க வழக்கில் தீர்க்க தீர்வையின் பேரால எதிராளி வழக்காளிக்கு கொடுக்கவேண்டிய தொகை ரூபா 1157 சதம் 50ம் இன்னும் ரூபாய் 750க்கும் 1932-ம் ஆண்டு கார்த்திகைமீ 10-ந் திகதி தொடக்கம் இறக்குமளவுக்கும் வருஷமொன்றுக்கு 100க்கு 12 வீதம் வட்டியும் கோட்டுச் செலவும் இதில் ரூபா 100 அறவிடப்பட்டது இந்தத் தொகைக்காக கீழ்விபரிக்கப்படும் காணியை பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

பூநகரிக் கோவிற்பற்று ஞானிமடம் இருக்கும் "செம்பன் மோட்டை" 10 ஏக்கர் 2 றூட் 22 பேட்ச் இதன் விசாலம் $235\frac{8}{10}$ பரப்புக்குச்சரி எல்லை கிழக்கு இராசையா சோமசுந்தரதினதும் இளையதம்பிக்கும் மறுபேருக்கும், வடக்கு கணபதிப்பிள்ளை வைரப்பெண் பாறுபதிப்பிள்ளைக்குடையவாதனம் மேற்கு கொஞ்சிக்குளமும் வாய்க்காலும் தெற்கு வாய்க்காலும் அம்பலவன் விருசியினதும் இடங்களும் இதில் சொரியலாய் அனைவாசி இன்னும் இத்தக்காணிக்கூடாகப்போகும் வாய்க்காலுக்காக விடப்பட்ட நிலம் பிறக்லாக.

N. B. வேறு விபரம் இதைப்பற்றி அறியவிரும்பினால் யாழ்ப்பாணம் சீராவிடி. சுப்பிறீங்கோட் பிறக்டர் கந்தலனம் வியாத்துரை அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

P. Rajaratnam.
கொம்மிஷனர்.

5 - 4 - 35.
Mis 10, 8 - 4 - 35.

# இலங்கா
# ஆயுள்வேத வைத்தியசாலை.

## அவுஷத விபரம்.

### கிரந்தி எண்ணெய்.

இவ் எண்ணெய் குழந்தைகளுக்குக் காணும் கிரந்திக்காய்ச்சல், கொதிக்காய்ச்சல், செங்கிரந்தி கருங்கிரந்தி, செவ்வாப்பு, செங்கரப்பன், கரிகிரந்தி, அக்கி, அகருணி இவைகட்கு உள்ளுக்குங் கொடுத்துத் தலைக்கும் வைக்கக்கூடியது. இன்னும் வயதில் முதிர்ந்தவர்க்கு உண்டாகும் நோய்கட்கும் உபயோகப்படக்கூடியது.
3 அவுன்ஸ் சீசா ரூபா 1 00.   6 அவுன்ஸ் சீசா ரூபா 1 90.   12 அவுன்ஸ் சீசா ரூபா 3 75.

### மாந்தபேதி எண்ணெய்.

இவ் எண்ணெய் மந்தம், மாந்தம், மலபந்தம், வயிற்றுப்பிசம், வாயு, சிதக்கட்டு, வயிற்றுவலி, கிருமி ரோகங்கள், மாந்தசுரம், வயிறூன்றி அடிக்கடி மலமிறங்குதல் ஆகிய இவைகளை மாற்றக்கூடியது.
சிசுக்களுக்கு ¼ முதல் ½ தேக்கரண்டி, பாலர்களுக்கு ½ முதல் 2 தேக்கரண்டி, வாலிபர் - வயோதிபர் 2 முதல் 4 தேக்கரண்டி, வெந்நீர், தேநீர், பால்கலந்து குடிக்கவும். சீசா விலை சதம் 75.

### கந்தகமூலி ரசாயனம்.

ஆண், பெண், இருபாலார்க்கும் உபயோகமாகும்படி செய்த இந்த ரசாயனம்.

சோகை, பாண்டு, வீக்கம், காமாலை, திரேக பாரிப்பு, நீர்க்கோவை, பிறநீர்க்கோவை, பெருவயிறு, சீராமை, பேராமை, சவுரி, கெண்டை முதலிய உதரரோகங்களையும்; சொறி, கரப்பன், கிரந்தி படர்தாமரை, அரிப்பு, தடிப்பு, கட்டிகள், கிரந்திநீர்ச் சம்பந்தமான மற்றும் ரோகங்களையும்; மலபந்தம், சிறுநீர்க் குறைவு, கால் கை உளைவு, கடுப்பு அசதி, கனதி, முதலாம் ரோகங்களையுந் தீர்க்கும்.

இன்னும் கெற்பாசய கிரந்தி, சூதகவாய்வு, சூதககாலவயிற்றுவலி, குத்து, சூதகச்சிக்கல், சூதகக்கட்டி காலந் தவறிச் சூதகங் காணுதல், சூதகம் வாராது தடைபடல், சூதகச் சிக்கலினால் நிரோகம் பாரித்தல், மலட்டுரோகம், அடிக்கடி கெற்பமழிதல், கெற்பத்தில் சிசுவை மரிக்கச் செய்தல், கெற்பமுண்டாகாமை, கெற்பாசயக்கிருமி, கெற்பாசயத்திற் சதை வளர்தல், சவ்வுவளர்தல், பாசுபற்றியிருத்தல், மதர்த் திருதலாகிய கெற்பாசய ரோகங்கள் யாவையும் நீக்கிக் கெற்பமுண்டாகச் செய்யும்.

12 அவுன்ஸ் விலை ரூபா 2—25,

### மிளகு சந்தனாதித் தைலம்.

தைலங்களுள் அதி குளிர்ச்சி நிறைந்தது, குணத்தில் விசேஷித்ததுமான இத்தைலம் பித்தரோகிகளுக்கும், அதிருடான தேகிகட்கும் மாத்திரமல்ல உட்காய்ச்சல், தலைசுரம், எலும்புக்காய்ச்சல், தலைக்கொதி கண்ணெரிவு, பித்தமயக்கம், தேகவெளுப்பு, சோகை முதலிய நோய்களையும் மாற்றும்

12 அவுன்ஸ் விலை ரூபா 2—25.

### பரிமள கூந்தல் தைலம்.

இது மயிர் அதிகமாக வளர்தற்கும் பெண்களுக்கு அழகு பயக்கும் கருங்கூந்தல் செறிவதற்கும் இன்றியமையாதது. தலையிலும் கண்களிலும் வரக்கூடிய சொறிவு, எரிவுகளைப் போக்கவல்லது. மனைவிடைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும், முகத்திற்கு அழகும் வசீகரணமும் அளிக்கும். போத்தல் விலை —1-00.

### சஞ்சீவித் தைலம்.

வெளிப்பிரயோகமாகவே சன்னி, வலிப்பு, வாதம், சுவாசகாசம், இருமல், சுளுக்கு, வயிற்றுவலி, புதிய காயங்கள், சேவ, முறிவு, செரிவு, வீக்கம், விரணம், மூலமுளை, படர்தாமரை மற்றும் பல்விதரோகங்களையும் மாற்றும். விலை சதம்—50.

மகா கோரோசனை மாத்திரை   விலை சதம் 75.
இராஜரிஷி சஞ்சீவி மாத்திரை   விலை சதம் 60.

தலைமை வைத்தியசாலை,
மணிக்கூட்டுத்தெரு யாழ்ப்பாணம்.

கிளைவைத்தியசாலை,
101. பெரியதெரு யாழ்ப்பாணமும்,
மன்னார், நெல்லியடி.
(Y. 69. 18-6-34 to 17-6-35.)



காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

# மங்களூர் ஓட்டுக் கம்பெனி.

மிலிற்றறி, கவர்மெண்ட், முனிசிப்பல்
கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக்கொள்ளும்.

க. செ. த. செ. செல்லையாபிள்ளை,
316ம் நி-ர் கிட்டங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏஜென்றுமாராய் கன்னாகம் இ. தாமோதரம்பிள்ளையும் கச்சேரியடி கிழக்கு, கனகரத்தினம்ஸ்ரூட்டு, பொ. தம்புவும் நியமிக்கப்பெற்றிருக்கின்றார்கள்.

(Y 41. 21-5-34 to 20-5-35.)



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுதலிலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, லவங்கப்பட்டை, அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அபகாந்த செந்தூரம், சப்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், பேர்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை றாத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை றாத்தலுக்கு ரூபா பத்து. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொலைவிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.
(Y. 17  1-11-34 to 31-12-35) சிலோன்


பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப்படும்.


# N. வைத்திலிங்கம்
# & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

சட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo
Telephone No 30.
(Y. 201. 8-2—7-2 36)



# பவுண்மார்க் ஓடுகள்.

| | |
|---|---|
| மலிவு நிறைந்த | பொலிவு நிறைந்த |
| அழகு மிக்க | புகழ்வு மிக்க |
| ஓசை கொண்ட | உயர்வு கண்ட |
| கனங் குறைந்த | காய்வு தந்த |
| கசிவில்லாத | சூடு கொள்ளாத |
| பவுண்மார்க் | ஓடுகள் இவைகளே. |

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதன வென்பதை மறவாதீர்.

தனிஏசண்டு: சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.
சப் ஏசண்டுகள்: சி. க. ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பிஐயா, ஊர்காவற்றுறை.

N. B. மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்,
மற்றெவரிடத்தும் இந்த ஓடுகள் இல்லை.

Phone No 93.
(Y. 27. 1-5-34 to 30-4-35)



விளம்பரம்.

# M. S. M. A. & Co.
## பாடிப்பேட்டை நிறம் சேலைகள்.

எங்களிடத்தில் தற்கால நாகரீகத்துக்கேற்ற புதுமாதிரியான
கெட்டிச் சாயமுள்ள பாடிப்பேட்டைச் சேலைகள்
விற்பனைக்கிருக்கின்றன

சாயத்திற்கு உத்தரவாதம்!   விலை சகாயம்!

முக்கிய கவனிப்பு:
எங்கள் பாடிப்பேட்டைச் சேலைகள் போலவே
போலிச் சேலைகளும் விற்பனையாகின்றன.
அவைகளை வாங்கி எங்கள்பேரில் குறைகூறாதீர்கள்.
தாங்கள் சேலைகள் வாங்கும்போது,
ஸ்ரீ வெங்கடேஸ்பர, 'ட்றேட்மார்க்'கும்,
M. S. M. A. அடையாளமுமுள்ள சேலைகளையே
பார்த்து வாங்குங்கள்.

M. S. M. A. அண்டு கம்பனி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

தலைமை ஆபீஸ்: பாடிப்பேட்டை, திருப்பதி P. O.
கிளை ஆபீஸ்: கொப்படி அம்மன்கோயில் தெரு காரைக்குடி.
(Mis. 213. 21-3- to 20-4-35.)


அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்
செல்வம் - பூரியார் கண்ணு முள.

வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarpounai, Jaffna, on MONDAY the 8TH APRIL 1935.